# தமிழ்

## அலகு - 1 : அன்னை மொழியே

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.**

1. குமரி கண்டத்தில் அரசாண்ட மொழி ***அன்னை தமிழ் மொழி.***
2. பாண்டிய மன்னனின் மகள் யார் ***அன்னை தமிழ் மொழி***.
3. சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் என்றவர் ***க.சச்சிதானந்தன்.***
4. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ***கனிச்சாறு*** தொகுப்பிலிருந்து நமக்கு பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.
5. பாவலரேறு ***தென்மொழி***, ***தமிழ்ச்சிட்டு*** இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்.
6. துரை.மாணிக்கம் என்பது யாருடைய இயற்பெயர் ***பாவலரேறு பெருஞ்சித்திரனார்.***
7. பாவலரேறின் நூல்கள் இரண்டு ***எண்சுவை எண்பது***, ***பள்ளிப் பறவைகள்***.
8. பாவலரேறு எழுதிய ***திருக்குறள்*** மெய்ப் பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது.
9. சின்ன குழந்தையின் சிரிப்பும் ஆனவள் ***அன்னை தமிழ் மொழி.***
10. பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள் ***அன்னை தமிழ் மொழி.***
11. தென்னவன் என்பது யாரைக் குறிக்கும் சொல் ***பாண்டியன்.***
12. இன்னறும் பாப்பத்தே எண்தொகையே என்பது ***பத்துப்பாட்டு, எட்டுத்தொகை*** நூல்களைக் குறிக்கும்.

## தமிழ்ச்சொல் வளம்

**- தேவநேயப் பாவாணர்.**

- "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்றவர் ***மகாகவி பாரதியார்***.
- தெலுங்கு, கன்னடம் முதலிய திராவிட மொழிகளுக்கே உரிய சொற்களும் தமிழில் உண்டு என்றவர் ***கால்டுவெல்***.
- திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்ற நூலின் ஆசிரியர் ***கால்டுவெல்***.
- நெல், கேழ்வரகு போன்ற தாவரத்தின் அடி ***தாள்*** எனப்படும்.
- ***கீரை, வாழை*** போன்ற தாவரத்தின் அடி தண்டு எனப்படும்.
- நெட்டி, மிளகாய் போன்ற தாவரத்தின் அடி ***கோல்*** எனப்படும்.
- ***தூறு*** என்பது குத்துச்செடி, புதன் முதலியவற்றின் அடி.
- தட்டு அல்லது தட்டை ***கம்பு, சோளம்*** போன்றவற்றின் அடி.
- கழி - ***கரும்பின்*** அடி.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

- ***கழை*** - மூங்கிலின் அடி.
- புளி, வேம்பு முதலியவற்றின் அடி - ***அடி*** என்றே அழைக்கப்படும்.
- அடி மரத்திலிருந்து பிரியும் மாபெரும் கிளை ***கவை.***
- கவையின் பிரிவு ***கொம்பு (அ) கொப்பு.***
- கொம்பின் பிரிவு ***கிளை.***
- ***கிளை***யின் பிரிவு சினை.
- சினையின் பிரிவு ***போத்து.***
- போத்தின் பிரிவு ***குச்சு.***
- குச்சின் பிரிவு ***இணுக்கு.***
- காய்ந்த குச்சி - ***சுள்ளி.***
- காய்ந்த தாளும் தோகையும் ***சண்டு.***
- புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து ***கொழுந்து*** ஆகும்.
- கரும்பின் நுனிப்பகுதி ***கொழுந்தாடை*** எனப்படும்.
- மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை ***வீ.***
- பூ வாடிய நிலையை ***செம்மல்*** என்பர்.
- சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் ***இரா.இளங்குமரனார்.***
- திருவள்ளுவருக்கு திருச்சி அல்லூரில் தவச்சிலை அமைத்தவர் ***இளங்குமரனார்.***
- பாவாணர் நூலகம் அமைத்தவர் ***இளங்குமரனார்.***
- விழிகளை இழக்க நேரிட்டாலும் கூட தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர் ***இளங்குமரனார்.***
- திரு.வி.க போல இமைகளை மூடிய படி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் ***இளங்குமரன்.***
- தமிழிசை இயக்கம், திருக்குறள் தமிழ் மரபுரை ***இளங்குமரனார்*** இயற்றிய நூல்கள் ஆகும்.
- தாவர பிஞ்சு வகையில் நுழாய் என்பது எதை குறிக்கும் ***இளம்பாக்கு.***
- கச்சல் என்பது ***வாழைப் பிஞ்சு.***
- வாழைத்தாற்றின் பகுதி ***சீப்பு.***
- சுருங்கிய பழத்தினை ***சிவியல்*** என்பர்.
- தேரை அமர்ந்ததினால் கெட்ட காய் ***தேரைக்காய்.***
- சுரைக்காயின் ஓடு ***குடுக்கை.***
- வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி ***கொம்மை.***
- அவரை, துவரை தானிய மணிவகை ***முதிரை.***



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

- வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து ***முத்து***.
- மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை ***கன்று***.
- விளாவின் இளநிலை ***குட்டி.***
- சம்பா நெல் வகையில் ***60 உள் வகைகள்*** உள்ளன.
- வரகு, குதிரைவாலி, காடைக்கண்ணி முதலிய சிறுகூலங்கள் விளையும் ஒரே இடம் ***தமிழ்நாடு (தென்).***
- ஒரு நாட்டு வளத்திற்கேற்ப அந்நாட்டு மக்களின் ***அறிவொழுக்கம்*** அமைந்திருக்கும்.
- திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது ***மொழி***.
- "மொழி ஞாயிறு" என்று அழைக்கப்படுபவர் ***தேவநேயப் பாவாணர்***.
- நம் பாடப்பகுதி தமிழ்ச்சொல் வளம், ***"சொல்லாய்வுக் கட்டுரைகள்"*** என்னும் தேவநேயப் பாவாணரின் நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.
- தமிழ் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர் ***பாவாணர்***.
- செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் ***தேவநேயப் பாவாணர்.***
- உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் ***பாவாணர்.***
- இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது ***தமிழ்தான்***.
- மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு ***மலேசியா***. அம்மொழி ***தமிழ்***.

## ***இரட்டுற மொழிதல்***

- ஆழிக்கு இணையாகப் பேசப்படுவது ***தமிழ்***.
- கடல் ***மூன்று*** சங்குகளைத் தருகிறது.
- தமிழ் ***முத்தமிழை*** வளர்க்கிறது.
- ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது ***இரட்டுற மொழிதல்*** அணி எனப்படும்.
- இரட்டுற மொழிதலை ***சிலேடை*** என்பர்.
- ***சிலேடைகள்*** செய்யுளிலும், உரைநடையிலும், மேடையிலும் பயன்படுத்தப்படுகின்றன.
- நம் பாடப்பகுதியில் இரட்டுற மொழிதல் பாடல் ***தனிப்பாடல் திரட்டு*** என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.
- சந்தக் கவிமணி எனப் போற்றப்படுபவர் ***தமிழழகனார்.***
- தமிழழகனாரின் இயற்பெயர் ***சண்முக சுந்தரம்***.
- தமிழழகனார் ***12*** சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார்.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

## ***உரைநடையின் அணிநலன்கள்***

***(எழில் முதல்வன்)***

- முதல் தமிழ்க்கணினியின் பெயர் ***"திருவள்ளுவர்"***, அது உருவாக்கப்பட்ட ஆண்டு ***1983***.
- நா. பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்திய நூல் ***குறிஞ்சி மலர்***.
- உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவமாகும் என்பர் ***தண்டி***.
- இலக்கியங்களில் உவமையைவிட ***உருவகமே*** உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது.
- எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையால் பயன்படுத்துகையில் "***இணை ஒப்பு"*** என்கிறோம்.
- " மழையும் புயலும்" என்னும் நூலின் ஆசிரியர் ***வ.ராமசாமி.***
- ஞாயிறு, திங்கள் நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்களை உயர்திணையாக ***தொல்காப்பியர்*** சுட்டியுள்ளார்.
- உயிர் இல்லா பொருட்களை உயிர் உள்ளன போல் "சோலையில் புகுவேன் மரங்கள் கூப்பிடும்" என்று ***திரு.வி.க*** எழுதியுள்ளார். இதனை ***இலக்கணை*** என்போம்.
- ***"தமிழின்பம்"*** என்னும் நூலில் ***சொல்லின் செல்வர்*** இரா.பி.சேதுபிள்ளை எதுகை மோனை அமைய பாடியுள்ளார்.
- சொற்களை அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்ய ***மு.வரதராசனார் "நாட்டுப்பற்று"*** என்னும் கட்டுரை தொகுப்பை எழுதினார்.
- முரண்படாத - மெய்ம்மையைச் சொல்வது ***"முரண்படு மெய்ம்மை".***
- கலப்பில்லாத பொய் - இது ***சொல்முரண்*** ஆகும்.
- "எதிரும் புதிரும்" - இது ***எதிரிணை இசைவு*** எனப்படும்.
- எதிரிணை இசைவில் ***ப.ஜீவானந்தம்*** எழுதியிருக்கிறார்.
- அவர் பேசாத நாள் உண்டா? இது பெரியாரைப் பற்றி ***அண்ணா*** கூறியது.
- ***உணர்ச்சி பெருவெள்ளம்*** என்பது சொல்லையோ கருத்தையோ அடுத்தடுத்து வைப்பது.
- வெ.இராமலிங்கத்தின் மற்றொரு பெயர் ***எழில் முதல்வன்***.
- வெ.இராமலிங்கத்தின் (அ) எழில் முதல்வனின் நூல்கள் ***இனிக்கும் நினைவுகள்***, ***எங்கெங்கு காணினும் , யாதுமாகி நின்றாய்.***
- எழில் முதல்வன் ***புதிய உரைநடை*** என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

## ***இலக்கணம்***

## ***எழுத்து, சொல்***

- மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது ***இலக்கணம்.***
- மொழியின் சிறப்பை அறிய உதவுவது ***இலக்கணம்.***
- முதல் எழுத்துகளை சார்ந்து தோன்றும் எழுத்துகள் ***சார்பெழுத்துகள்*** இது ***10*** வகைப்படும்.
- அளபெடை இரண்டு வகைப்படும். அவை ***உயிரளபெடை, ஒற்றளபெடை***.
- அளபெடுத்தல் - ***நீண்டு ஒலித்தல்.***
- ஈரளபெடை ***மூன்று*** வகைப்படும்.
- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்து அளபெடுப்பது ***செய்யுளிசை அளபெடை***.
- செய்யுளிசை அளபெடையை ***இசைநிறை அளபெடை*** என்பர்.
- இனிய ஓசைக்காக அளபெடுப்பது ***இன்னிசை அளபெடை***.
- செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது ***சொல்லிசை அளபெடை***.
- மொழி ***மூன்று*** வகைப்படும்.
- தனிமொழிக்கும், தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது ***பொதுமொழி*** எனப்படும்.
- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமியின் அது ***தனிமொழி*** எனப்படும்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது ***தொடர்மொழி*** எனப்படும்.
- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் ***விகுதி பெற்ற தொழிற்பெயர்*** ஆகும்.
- எதிர்மறைப் பொருளில் வருவது ***எதிர்மறைத் தொழிற்பெயர்*** ஆகும்.
- விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற் பெயராதல் ***முதனிலைத் தொழிற்பெயராகும்.***
- விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் ***முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்.***

## ***சிந்தனை வினாக்கள்***

1. உணர் வெழுப்ப என்பதைப் பிரித்தால் ..................... என வரும். (உணர்வு + எழுப்ப)
2. அல்லிக்காய், கூகைக்காய், தேரைக்காய் என்பன ........................ வகையைச் சேர்ந்தது.

   அ) பிஞ்சு வகை ஆ) குலை வகை இ) ***கெட்டுப்போன காய்கனி வகை***
3. பிள்ளை, கன்று, நாற்று, மடலி என்பன ***இளம் பயிர்வகை.***
4. தாமரை, அந்தமான், வைகை என்பன ***பொதுமொழி***.
5. கொடுப்பதூஉம், வரனசைஇ, படாவு முறையே .................. அளபெடைகள்.

   அ) சொல்லிசை, இன்னிசை, இசைநிறை



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

ஆ) ***இன்னிசை, சொல்லிசை, இசைநிறை***

இ) இசைநிறை, இன்னிசை, சொல்லிசை

6. தொழிற்பெயர், எதிர்மறைத் தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர் முறையே .............

அ) ***நடத்தல், செய்யாமை, கொடு***

ஆ) கொடு, நடத்தல், செய்யாமை

இ) நடத்தல், கொடு, செய்யாமை

7. "வாழையும் கமுகும் தாழ்தலைத் தொங்கும்" என சிலப்பதிகாரம் பாடல் கூறும் ஊரின் சிறப்பு ***திண்டுக்கல் மாவட்டத்தின் சிறுமலை.***

8. கலப்பில்லாத பொய் - இது ***சொல் முரண்.***

9. அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் ***இணை ஒப்பு*** என்கிறோம்.

10. சீப்பு என்பது - ***வாழைத்தாற்றின் பகுதி*** / வாழைஇலை.

வினாக்கள்

1. "முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவோமே" என்று பாவலரேறு யாரை வாழ்த்துகிறார்? விளக்குக.
2. "யாண்டும் முழங்கத் தனித்தமிழே" - என்று பெருஞ்சித்தனார் எதன் பெருமையை முழங்குகின்றார் விளக்குக.
3. அவரை, கொத்து கொத்தாக காய்த்துள்ளது. இதுபோல் 5 குலை வகைகளைத் தொடரில் அமைத்து எழுதுக.
4. தாவர பிஞ்சு வகைகள் நான்கினை எழுதுக. (பக் - 6)
5. அன்னை மொழியே பாடலில் அமைந்துள்ள அணியை சுட்டி விளக்குக.
6. அ) தாவரத்தின் துளிர் பருத்து காணப்பட்டது.

   ஆ) கழி பருத்து காணப்பட்டது.

   இ) அரும்பு வாடி காணப்பட்டது.

   இந்த கூற்றில் சரியானது எது? தவறானது எது? விளக்குக.
7. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ் தொண்டுகளை எழுதுக. (பக் - 3)
8. தமிழழகனார் - சிறு குறிப்பு வரைக. (பக் - 10)
9. இரண்டுற மொழிதலில் (அ) சிலேடை அணி என்றால் என்ன? (பக் - 10)
10. எதிரிணை இசைவு என்றால் என்ன? (பக் - 14)
11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது? (பக் - 18)
12. தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
13. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? சான்று தருக.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

14. ஓடு, நட, படி, காண் - வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. (பக் - 18)

15. உயிரளபெடை என்றால் என்ன? சான்று தருக.

16. ஒற்றளபெடை என்றால் என்ன? சான்று தருக.

17. மூவகை மொழிகள் யாவை? (பக் - 17)

18. பால், கனி, நூல், போ இத் தனிமொழிகளைத் தொடர்மொழியாக்குக.

19. தட்டு, அடி, வரை, நில், கேடு, சூடு, கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

20. கேட்டல், பார்த்தல், நடத்தல், வருதல் - தொழிற்பெயர்களை வினையடி விகுதி என வகைப்படுத்துக.

# தமிழ்
## இயல் - 3 : விருந்து போற்றுதும்!

1. முன்பின் அறியாத புதியவர்களுக்கே ***விருந்தினர்*** என்று பெயர்.
2. "விருந்தே புதுமை" என்று ***தொல்காப்பியர்*** கூறியுள்ளார்.
3. விருந்தினரைப் போற்றுதல் என்பது ***இல்லறக்*** கடமைகளுள் ஒன்று.
4. தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் . . . என்று சிலப்பதிகாரத்தில் விருந்து செய்ய இயலாது வருந்துபவள் ***கண்ணகி***.
5. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் ***கம்பர்*** குறிப்பிட்டுள்ளார்.
6. கலிங்கத்துப் - பரணியிலும் ***செயங்கொண்டார்*** விருந்தினர்க்கு உணவிடுவோரின் முக மலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.
7. "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்" என்று ***நற்றிணை*** குறிப்பிடுகிறது.
8. தமிழர் விருந்தினரை ***ஏழு அடி*** நடந்து சென்று வழியனுப்பினர்.
9. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்டு" என்று கொன்றை வேந்தனில் ***ஔவையார்*** பாடியுள்ளார்.
10. தனித்து உண்ணாமை என்பது ***தமிழரின்*** விருந்தோம்பல் பண்பு.
11. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் ***குழல்மீன் கறியும், பிறவும்*** கொடுத்தனர் என்பதை சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.
12. தமிழர் பண்பாட்டில் ***வாழை இலைக்கு*** தனித்த இடமுண்டு.
13. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் ***வாழையிலை விருந்து விழாவை*** ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.
14. வீட்டின் பெரிய வாயிலை மூடும் முன் உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீரோ என்று கேட்கும் வழக்கத்தைப் பற்றி ***குறுந்தொகை*** கூறுகிறது.
15. ***நாயக்கர், மராட்டியர்*** காலத்தில் மிகுதியான சத்திரங்கள் கட்டப்பட்டன.
16. பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் ***விருந்தோம்பல் பண்பாடு*** செழித்திருந்தது.

***வினாக்கள்***

1. அனைவருடான பகிர்ந்துண்ணலும், தமிழரின் விருந்து போற்றுதலும் எங்கே தொடங்குகிறது?
2. விருந்தோம்பல் என்றால் என்ன?



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

3. விருந்து - விருந்தினர் குறித்த தொல்காப்பியரின் கருத்து யாது?
4. அறவுணர்வும் தமிழர் மரபும் பற்றி வள்ளுவர் வழிநின்றும், சிலம்பின் வழி நின்றும் விளக்குக.
5. தனித்து உண்ணார் தமிழர் என்பதை விளக்குக.
6. "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்" என்பதை நற்றிணை வழி விளக்குக.
7. தமிழர் விருந்தினரை வழியனுப்பும் நிகழ்வு குறித்து விளக்குக.
8. இன்மையுலும் சிறந்த விருந்தோம்பல் செய்தவர் தமிழர் என்பதை விரித்துரைக்க.
9. இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல் சிறப்பை எழுதுக.
10. கம்பரும், செயங்கொண்டாரும் விருந்தோம்பல் பற்றி கூறும் செய்திகளை எழுதுக.
11. நிலத்திற்கேற்ப விருந்து - விளக்குக.
12. விருந்தோம்பல் பற்றிய அம்சப்பிரியாவின் புதுக்கவிதையை எழுதுக.
13. தமிழர் விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்து எழுதுக.
14. உற்றாரோடு நின்ற விருந்து குறித்து எழுதுக. (அல்லது)

இடைக்காலத்தில் சத்திரங்கள் பெருங்கியது ஏன்?

15. இன்றைய தமிழர்களிடம் விருந்தோம்பல் எவ்வாறு பின்பற்றப்படுகிறது?
16. வாழையிலை விருந்து விழா குறித்து எழுதுக.
17. காலமாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்களை எழுதுக.

## காசிக்காண்டம்

**- அதிவீரராம பாண்டியர்.**

1. காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் ***காசிக்காண்டம்.***
2. காசிக் காண்டத்தின் ஆசிரியர் ***அதிவீரராம பாண்டியர்.***
3. காசிக் காண்டத்தில் "இல்லொழுக்கங்கூறிய" பகுதியிலுள்ள ***பதினேழாவது (17)*** பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.
4. முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் ***அதிவீரராம பாண்டியர்.***
5. கொற்கை (பாண்டிய நாடு) அரசர் அதிவீரராம பாண்டியர் ***தமிழ்ப் புலவராகவும்*** திகழ்ந்தார்.
6. அதிவீரராம பாண்டியன் எழுதிய மற்றொரு நூல் ***வெற்றி வேற்கை.***
7. வெற்றி வேற்கை ***நறுந்தொகை*** எனவும் அழைக்கப்படுகிறது.
8. சீவலமாறன் என்ற பட்ட பெயர் கொண்டவர் ***அதிவீரராம பாண்டியன்.***
9. விருந்தினர் மனம் மகிழ அதிவீரராமர் கூறும் விருந்தோம்பல் முறைகள் ***ஒன்பது.***
10. அதிவீரராமர் இயற்றிய வேறு இரண்டு நூல்கள் ***நைடதம், கூர்ம புராணம், லிங்க புராணம்.***



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

## ***<u>வினாக்கள்</u>***

1. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களாக காசிக் காண்டத்தின் வழி அதிவீரராம பாண்டியர் கூறுவனவற்றை விரித்து எழுதுக.
2. காசிக்காண்டம் எதனை பாடுவதாக அமைந்துள்ளது?
3. அதிவீரராம பாண்டியர் எழுதிய நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. விருந்தோம்பல் குறித்த விவேக சிந்தாமணி பாடலின் கருத்தை விளக்குக.
5. அதிவீரராம பாண்டியர் - குறிப்பு வரைக.
6. காசிக்காண்டம் - நூற்குறிப்பு வரைக.

## ***<u>மலைபடுகடாம்</u>***

***- பெருங்கௌசிகனார்***

1. பண்டைய தமிழர்கள் பண்பிலும் ***<u>கலையிலும்</u>*** சிறந்து விளங்கினர்.
2. கலைஞர்களுக்கு விருந்தும் பரிசும் கொடுத்து மன்னர்கள் போற்றியதைக் காட்சிப்படுத்துவது ***<u>தினைச்சோற்று விருந்து</u>***.
3. சிவந்த பூக்களைக் கொண்ட மரம் ***<u>அசோக மரம்.</u>***
4. மலைபடுகடாம் ***<u>பத்துப்பாட்டு</u>*** நூல்களுள் ஒன்று.
5. மலைபடுகடாம் ***<u>கூத்தராற்றுப்படை</u>*** எனவும் அழைக்கப்படுகிறது.
6. மலைபடுகடாமில் ***<u>583</u>*** அடிகளைக் கொண்டது.
7. மலைபடுகடாமில் மலையை ***<u>யானையாகவும்,</u>*** அதில் எழும் ஓசைகளை அதன் ***<u>மதமாகவும்</u>*** உருவகம் செய்யப்பட்டுள்ளது.
8. மலைபடுகடாம் என்பது ***<u>கற்பனை நயம்</u>*** பெயராகும்.
9. மலைபடுகடாம் ***<u>நன்னன்</u>*** என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ***<u>பெருங்கௌசிகனார்</u>*** பாடியது.
10. பெருங்கௌசிகனாரின் ஊர் ***<u>இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்.</u>***
11. கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துவதே ***<u>ஆற்றுப்படை</u>***.
12. பாக்கம் என்பது ***<u>சிற்றூர்.</u>***
13. நவிரமலை மன்னன் ***<u>நன்னன்.</u>***

## ***<u>வினாக்கள்</u>***

1. மலைபடுகடாம் - நூற்குறிப்பு வரைக.
2. ஆற்றுப்படை என்றால் என்ன?



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

3. தினைச்சோற்று விருந்து என்றால் என்ன?
4. கூத்தனை கூத்தன் ஆற்றுப்படுத்துவதனை மலைபடுகடாம் வழி நின்று விளக்குக.
5. நன்னனின் கூத்தர்களுக்கு கிடைக்கப் பெறும் நன்மைகள் யாவை?
6. மலைபடுகடாம் இயற்றிய பெருங்கௌசிகனார் குறிப்பு எழுதுக.

## ***கோபல்லபுரத்து மக்கள்***

***(கி.ராஜநாராயணன்)***

**கதை மாந்தர் :**

- **சுப்பையா**
- **அன்னமய்யா**
- **பசியால் வாடிய வாலிபன் மணி (பரமேஸ்வரன்)**
- **வயலில் அருகு எடுப்போர்**

1. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச் செயலை "அன்னமய்யா செயலுடன் ஒப்பிட்டு எழுதுக.

## ***தொகாநிலைத் தொடர்கள்***

1. காற்று வீசியது என்பது ***தொகாநிலைத்*** தொடர் .
2. தொகாநிலைத் தொடர் ***ஒன்பது*** வகைப்படும்.
3. எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது ***எழுவாய்த்*** தொடர் ஆகும்.
4. விளியுடன் வினை தொடர்வது ***விளித்*** தொடர் ஆகும்.
5. பெண்ணே செல், குழந்தையே கேள் என்பது ***விளித்***தொடர்.
6. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது ***வினைமுற்றுத்*** தொடர்.
7. தேடினான் கண்ணன், வாடினாள் ராதா என்பது ***வினைமுற்றுத்*** தொடர்.
8. கேட்ட பாடல், பார்த்த படம் என்பது ***பெயரெச்சத்*** தொடர்.
9. ஓடி களைத்தனர், தேடி அலைந்தனர் என்பது ***வினையெச்சத்*** தொடர்.
10. வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் ***வேற்றுமைத் தொகாநிலைத்*** தொடர்கள்.
11. களிமண்ணால் செய்தார் என்பது ***மூன்றாம்*** வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.
12. இடைச் சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது ***இடைச்சொல்*** தொடர் ஆகும்.
13. உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது ***உரிச்சொல்*** தொடர்.
14. ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது ***அடுக்குத் தொடர்*** ஆகும்.
15. வா! வா! வா! என்பது ***அடுக்குத் தொடர்.***

***16.*** செய்ய கூடிய செயல், பார்க்க வேண்டிய இடம் என்பன ***கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்.***

## ***வினாக்கள் :***

1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?
2. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும். அவையாவை?
3. எழுவாய்த் தொடரை சான்றுடன் விளக்குக.
4. விளித் தொடரை சான்றுடன் விளக்குக.
5. வினைமுற்றுத் தொடரை சான்றுடன் விளக்குக.
6. பெயரெச்சத் தொடரை சான்றுடன் விளக்குக.
7. வினையெச்சத் தொடரை சான்றுடன் விளக்குக.
8. வேற்றுமைத் தொடரை சான்றுடன் விளக்குக.
9. இடைச்சொல் தொடரை சான்றுடன் விளக்குக.
10. உரிச்சொல் தொடரை சான்றுடன் விளக்குக.
11. அடுக்குத் தொடரை சான்றுடன் விளக்குக.
12. கூட்டுநிலைப் பெயரைச்சங்கள் எப்போது உருவாகின்றன?

## ***திருக்குறள்***

***(திருவள்ளுவர்)***

1. விழுப்பம் என்பதன் பொருள் ***சிறப்பு***.
2. வெகுளி என்பதன் பொருள் ***கோபம்***.
3. கிடைத்தற்கரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு ***பெரியோரைத் துணையாக கொள்வது***.
4. தாளாண்மை என்பது ***விடாமுயற்சி***.
5. குறள் என்பது ***இரண்டடி வெண்பா***.
6. திருவள்ளுவர் நாள் ***தைத்திங்கள் இரண்டாம் நாள்***.
7. திருவள்ளுவர் ஆண்டு ***கி.மு.31***
8. ஊழ் என்பது ***முன்வினை***.
9. திருக்குறள் ***உலகப் பொதுமறை*** என்று அழைக்கப்படுகிறது.
10. மயக்கம் என்பது ***அறியாமை***.
11. நச்சப்படாதவன் என்பது ***பிறருக்கு உதவி செய்யாதவன்***.
12. உஞற்றுபவர் என்பது ***முயற்சிப்பவர்***.
13. கண்ணோட்டம் என்பது ***இரக்கம்***.

***வினாக்கள் :***

1. ஒழுக்கத்தால் விளையும் நன்மை எது?
2. பேரியாரைத் துணையாக கொள்வதன் சிறப்பு என்ன?
3. நல்லவர் நட்பை கெவிடுவது எதற்கு சமம்?
4. கண்களால் எப்போது பயனில்லை என்கிறார் வள்ளுவர்?
5. எது இழிவாகும்?
6. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகள் யாவை?
7. மெய் உணர்தல் வழி வள்ளும் தரும் செய்தி யாது?
8. பெரியாரைத் துணை கோடல் - என்னும் அதிகாரத்தின் வழி வள்ளுவர் தரும் கருத்து யாது?
9. கொடுங்கோன்மையால் ஏற்படுவன குறித்து விளக்குக.
10. இரக்கப்பண்பு குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?
11. ஆள்வினை உடைமை என்னும் விடாமுயற்சியை விளக்குக.
12. "நன்றியில் செல்வம்" - வள்ளுவர் வழி நின்று விளக்குக.
13. வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும் - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
14. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் . . . - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
15. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள . . . - இக்குறளில் கண் அமைந்த அணியை விளக்குக.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

# தமிழ்
## இயல் - 4 : செயற்கை நுண்ணறிவு

1. உயிரினங்களில் மனிதரை உயர்த்திக்காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றல்.
2. 1980 களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின.
3. இனி இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.
4. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர் பெப்பர்.
5. இவ்வுலகை இதுவரை மென்பொருள் ஆண்டு கொண்டிருக்கிறது.
6. செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.
7. இங்கிவனை யான்பெறவே என்னதவம் செய்துவிட்டேன் என்று பாரதியார் மெச்சுவது போல் நாம் மெய்நிகர் உதவியாளரை மெச்சிக் கொள்ளலாம்.
8. இந்தியாவின் பெரிய வங்கி பாரத ஸ்டேட் வங்கி.
9. பாரத ஸ்டேட் வங்கி வாடிக்கையாளர்களுடன் உரையாட உருவாக்கிய மென்பொருள் இலா.
10. திறன் பேசியின் இன்றைய தொழில்நுட்பம் உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது.
11. செயற்கை நுண்ணறிவை யார் முதலாவதாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வணிக வானம் வசப்படும்.
12. எதிர்காலத்தில் உலகில் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கறிய முன்னேற்றத்தைத் தருவது செயற்கை நுண்ணறிவு.
13. எதிர்காலத்தில் நாம் வாகனப் பயணம் சிறப்பாக அமைய செயற்கை நுண்ணறிவு கொண்டு நாம் வாகனத்தை இயக்க வேண்டும்.

***வினாக்கள் :***

1. கரகாட்டம் என்றால் என்ன? (பக் - 128)
2. கரகாட்டம் எந்தெந்த மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது?
3. மயிலாட்டம் என்பது யாது? (பக் - 129)
4. மயிலாட்டத்தின் அடவுகளாகக் கலைஞர்கள் குறிப்பிடுவன எவை? (பக் - 129)
5. காவடியாட்டம் என்பது யாது? (பக் - 129)
6. காவடியின் வகைகளை எழுதுக. (பக் - 129)
7. ஒயிலாட்டம் என்றால் என்ன? (பக் - 129)
8. ஒயிலாட்டத்தில் பயன்படும் இசைக்கருவிகளை எழுதுக. (பக் - 129)



**வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122**

9. சேவையாட்டம் என்பது எது? (பக் - 129-130)
10. பொய்க்கால் குதிரையாட்டம் குறித்து எழுதுக. (பக் - 130)
11. பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்களை எழுதுக. (பக் - 130)
12. தப்பாட்டத்தின் வேறு பெயரினை எழுதுக. (பக் - 130)
13. தப்பாட்டம் என்பது யாது? (பக் - 130)
14. புலி ஆட்டம் என்றால் என்ன? (பக் - 131)
15. தெருக்கூத்து குறித்து எழுதுக. (பக் - 131)
16. அருச்சுனன் தபசு எது வேண்டி நிகழ்த்தப்படும் கூத்து? (பக் - 132)
17. தோற்பாவைக் கூத்து பற்றி எழுதுக. (பக் - 132)

## ***பூத்தொடுத்தல்***

1. மலர்கள் தரையில் நழுவும், எப்போது? ***தளரப் பிணைத்தால்.***
2. பூத்தொடுத்தல் கவிதையை எழுதியவர் ***உமா.மகேஸ்வரி.***
3. உமா மகேஸ்வரி பிறந்த மாவட்டம் ***மதுரை.***
4. உமா மகேஸ்வரி தற்போது ***ஆண்டிப்பட்டி*** ஊரில் வாழ்ந்து வருகிறார்.
5. உமா மகேஸ்வரி இயற்றிய கவிதை தொகுதி ***நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை*** ஆகியன.

## ***முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்***

1. சிற்றிலக்கியம் ***96*** வகைப்படும்.
2. தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று ***பிள்ளைத்தமிழ்.***
3. பிள்ளைத்தமிழ் ***பத்து*** பருவங்களை உடையது.
4. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழை இயற்றியவர் ***குமரகுருபரர்.***
5. செங்கீரைப் பருவத்தின் மாதங்கள் ***5 மற்றும் 6 மாதங்கள்.***
6. குமரகுருபரரின் காலம் ***17ஆம் நூற்றாண்டு.***
7. பிள்ளைத்தமிழுக்குரிய பொதுவான பருவங்கள் மொத்தம் ***7.***
8. பண்டி என்ற சொல்லின் பொருள் ***வயிறு.***
9. ஆடுக இலக்கணக் குறிப்பு தருக ***வியங்கோள் வினைமுற்று.***
10. செங்கீரைப் பருவத்தில் ***எட்டாம்*** பாடல் நமக்குப் பாடப்பகுதியாக வந்துள்ளது.

**பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 1. கிண்கிணி | - | காதில் அணிவது | 4 |
| 2. அரைநாண் | - | நெற்றியில் அணிவது | 3 |
| 3. சுட்டி | - | காலில் அணிவது | 1 |
| 4. குழை | - | தலையில் அணிவது | 5 |
| 5. சூழி | - | இடையில் அணிவது | 2 |

**வினாக்கள்**

1. பிள்ளைத் தமிழ் என்றால் என்ன?
2. பிள்ளைத் தமிழ் எத்தனை வகைப்படும்? ஆவை யாவை?
3. ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களைக் குறிப்பிடுக.
4. பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களைக் குறிப்பிடுக.
5. "பதிந்து" - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
6. குமரகுருபரர் - குறிப்பு வரைக.
7. குமரகுருபரர் இயற்றிய பிற நூல்களை எழுதுக.
8. செங்கீரைப் பருவம் குறித்து எழுதுக.
9. குமரகுருபரர் எவ்வெவ் மொழிகளில் வல்லவர்?
10. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் குறிப்பிடும் அணிகலன்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

## ***கம்பராமாயணம்***

1. கம்பராமாயணம் ***ஆறு*** காண்டங்களை உடையது.
2. கம்பராமாயணத்தில் ***118*** படலங்கள் உள்ளன.
3. கம்பராமாயணத்தின் ஆசிரியர் ***கம்பர்***.
4. கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர் ***இராமாவதாரம்***.
5. கம்பராமாயணத்தை வடமொழியில் எழுதியவர் ***வான்மீகி***.
6. திருக்கை வழக்கத்தை இயற்றியவர் ***கம்பர்***.
7. கம்பராமாயணம் ***வழி*** நூல் ஆகும்.
8. கங்கைப் படலத்தின் வேறு பெயர் ***குகப்படலம்***.
9. வெய்யோன் என்ற சொல்லின் பொருள் ***பகலவன்***.
10. உள்ளதை உணர்ந்தபடி கூறுவது ***கவிதை***.
11. கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் என்று பெருமைப்படுபவர் ***பாரதி***.
12. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்றவர் ***கம்பர்***.

**வினாக்கள்**

1. மோதி உடம்புதோறு உயிரென உலாயதன்றே உவமையை விளக்குக. (பக் - 136)
2. கோசல நாட்டில் ஏன் வண்மையில்லை? திண்மையில்லை? (பக் - 137)
3. கோசல நாட்டின் வளத்தை எழுதுக. (பக் - 137)
4. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களை எழுதுக. (பக் - 138)
5. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (பக் - 138)
6. கம்பர் இயற்றிய வேறு நூல்களைக் குறிப்பிடுக. (பக் - 138)
7. இராமனுடைய அழகிற்கு எவற்றையெல்லாம் ஆசிரியர் ஒப்பிடுகிறார்? (பக் - 137)
8. கும்பகருணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? (பக் - 138)
9. சரயு ஆறு எங்கெங்கு பாய்ந்து செல்கிறது? (பக் - 136)



**வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122**

10. மருத நிலத்தின் சிறப்பினை எழுதுக. (பக் - 137)

## ***பாய்ச்சல்***

**கதை மாந்தர்கள் :**

**அழகு**

**இராமு**

**அனுமார் வேடமிட்ட ஒருவன்**

**மேளக்காரர்**

**ஊர்மக்கள்**

1. பாய்ச்சல் கதையின் ஆசிரியர் ***சா.கந்தசாமி***.
2. பாய்ச்சல் ***தக்கையின் மீது நான்கு கண்கள்*** சிறுகதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
3. சா.கந்தசாமி இயற்றிய புதினத்தின் பெயர் ***சாயாவனம்***.
4. சா.கந்தசாமியின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ***விசாரணைக் கமிழன்***.
5. சா.கந்தசாமி இயற்றிய குறும்படத்தின் பெயர் ***சுடுமண் சிலைகள்***.
6. தொலைந்து போனவர்கள், சூர்ய வம்சம், சாந்தகுமாரி முதலிய புதினங்களை எழுதியவர் ***சா. கந்தசாமி***.
7. ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டியோர் என்று கூறும் நூல் ***சிலப்பதிகாரம்.***
8. தொண்டி ***இராமநாதபுரம்*** மாவட்டத்தில் உள்ளது.

## ***அகப்பொருள் இலக்கணம்***

1. பொருள் என்பது ***ஒழுக்கமுறை*** குறிக்கும்.
2. தமிழர் வாழ்வியலை ***அகம், புறம்*** எனப் பிரித்தனர்.
3. தலைவன் தலைவி இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது ***அகத்திணை***.
4. அகப்பொருள் பாடுவதற்குரிய பொருள்கள் மொத்தம் ***3***.
5. நிலமும் பொழுதும் ***முதற்பொருள்*** எனப்படும்.
6. மலையும் மலை சார்ந்த இடமும் ***குறிஞ்சி***.
7. முல்லை ***காடும் காடு சார்ந்த இடமும்***.
8. கடலும் கடல் சார்ந்த இடம் ***நெய்தல்***.
9. சுரமும் சுரம் சார்ந்த இடம் ***பாலை***.
10. வயலும் வயல் சார்ந்த இடம் ***மருதம்***.
11. பொழுது ***இரண்டு*** வகைப்படும்.
12. ஓராண்டின் ஆறு கூறுகளைப் ***பெரும்பொழுது*** என்று அழைப்பர்.
13. ஒரு நாளின் ஆறு கூறுகளைச் ***சிறுபொழுது*** என்று அழைப்பர்.


வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

14. கார் காலத்தின் காலம் ***ஆவணி, புரட்டாசி***.

15. மார்கழி, தை ***முன்பனி*** காலத்திற்குரியன.

16. ஐப்பசி, கார்த்திகை ***குளிர்*** காலத்திற்குரியன.

17. முதுவேனிற் காலத்தின் மாதம் ***ஆனி, ஆடி***.

18. மாசி, பங்குனி ***பின்பனி*** காலத்திற்குரியன.

19. சித்திரை, வைகாசி ***இளவேனிற்*** காலத்திற்குரியன.

20. காலை 10 மணி முதல் 2 மணி வரை உள்ள பொழுது ***நண்பகல்***.

21. வைகறை என்பது இரவு 2 மணி முதல் ***காலை 6 மணி*** வரை.

22. மாலை என்பது மாலை ***6*** மணி முதல் இரவு ***10*** மணி வரை.

23. "எல்" என்ற சொல்லின் பொருள் ***ஞாயிறு.***

24. குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுது ***யாமம்.***

25. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது ***கார்காலம்***.

26. இளவேனில், முதுவேனில், பின்பனி ***பாலை*** நிலத்திற்குரிய பெரும்பொழுதாகும்.

27. "எற்பாடு" ***நெய்தல்*** நிலத்திற்குரிய சிறுபொழுது.

28. ஆறுபெரும் பொழுதுகளும் ***மருதம், நெய்தல்*** நிலத்திற்குரியன.

29. ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவற்றை ***கருப்பொருள்கள்*** என அழைப்பர்.

30. கருப்பொருள்கள் ***பதின்மூன்று*** வகைப்படும்.

**வினாக்கள்**

1. பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. அகத்திணை என்பது யாது?
3. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. சிறுபொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. கருப்பொருள் என்றால் என்ன?
6. முதற்பொருள் என்றால் என்ன?
7. அன்பின் ஐந்திணைகளை எழுதுக.
8. ஐந்திணைகளுக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுதினை குறிப்பிடுக.
9. ஐவகை நிலங்களும் அவற்றின் இடத்தையும் எழுதுக.
10. குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.
11. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் எவையேனும் நான்கினை எழுதுக.
12. பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்களை எழுதுக.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

13. நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

14. மருதத்திணைக்குரிய கருப்பொருள்களுள் எவையேனும் ஆறினை எழுதுக.

15. வைகறைக்குரிய கால அளவை எழுதுக.

## ***திருக்குறள்***

## வினாக்கள் :

1. அமைச்சர் என்பதன் இலக்கணம் யாது?
2. அமைச்சரிடம் அமைய வேண்டிய திறன்கள் யாவை?
3. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?
4. தீதின்றி வந்த பொருளின் பயன் யாது?
5. உலகத்தால் யாரை உறவாகக் கொண்டு போற்றுவர்?
6. சான்றோர், கயவர் இயல்புகள் யாவை?
7. சொற்பொருள் பின்வரு நிலையணி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
8. உவமையணி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
9. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.
10. சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோல்
    கொல்லப் பயன்படும் கீழ் - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

# தமிழ்
## இயல் - 5 : மொழி பெயர்ப்புக் கல்வி

1. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது ***மொழிபெயர்ப்பு*** என்கிறார் மணவை முஸ்தபா.
2. உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்றவர் ***மு.கு.ஜகந்நாத ராஜா***.
3. மொழிபெயர்த்தல் என்ற தொடரை தொல்காப்பியர் ***மரபு*** இயலில் குறிப்பிட்டுள்ளார்.
4. ***18ஆம் நூற்றாண்டு*** வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.
5. தமிழுக்குரிய நூலாக இருந்த ***திருக்குறள்*** நூல் உலக மொழிகளுக்குரியதாக மாறியது.
6. கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ***இரவீந்திரநாத் தாகூர்.***
7. கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிறகு ***நோபல் பரிசு*** கிடைத்தது.
8. கீதாஞ்சலியை வங்க மொழியில் எழுதியவர் ***இரவீந்திரநாத் தாகூர்.***
9. கருத்துப் பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் என்பன எல்லாம் மொழிபெயர்ப்பு வழியாகவே ***சர்வதேசத்*** தன்மை பெறுகின்றன.
10. "வால்காவிலிருந்து கங்கை வரை" என்ற நூலை இந்தியில் எழுதியவர் ***ராகுல் சாங்கிருத்யாயன்.***
11. வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தவர் ***கணமுத்தையா*** ஆண்டு ***1949***.
12. Camel என்பதற்கு ***கயிறு, ஒட்டகம்*** என இருபொருள் உண்டு.
13. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழி பெயர்ப்பை ***பயன்கலை*** என்று குறிப்பிடுவார்கள்.
14. "காசினியில் இன்று வரை அறிவின் மன்னர் கண்டுள" எனும் பாடலைப் பாடியவர் ***குலோத்துங்கன்.***
15. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாடியவர் ***பாரதியார்.***
16. Revolution மொழி பெயர்த்து எழுதுக ***புரட்சி***.
17. Exhibition மொழி பெயர்க்க ***காட்சி, பொருட்காட்சி.***
18. அமெரிக்கா ***ஹீரோஷிமா*** மீது குண்டு வீசியது.
19. பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்கள் ***வடமொழி*** கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவை.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

20. அருந்துணை பிரித்து எழுதுக ***அருமை + துணை.***

***பொருத்துக***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சதம் | - | உயிர் | 4 | 1. முனிவு | - | சின்னம் | 3 |
| 2. மருள் | - | தெளிவு | 3 | 2. தார் | - | உறவினர் | 4 |
| 3. தெருள் | - | மயக்கம் | 2 | 3. கவரி | - | சினம் | 1 |
| 4. ஆவி | - | நூறு | 1 | 4. தமர் | - | மாலை | 2 |

## வினாக்கள் :

1. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா கூறும் கருத்தை எழுதுக? (பக் - 100)
2. மொழிபெயர்ப்புக் குறித்து மு.கு.ஜகந்நாத ராஜா கூற்றை எழுதுக. (பக் - 100)
3. வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட காப்பியங்களைக் குறிப்பிடுக. (பக் - 101)
4. பாரதியின் மொழிபெயர்ப்புச் சொற்களைப் பட்டியலிடுக. (பக் - 101)
5. மொழிபெயர்ப்பின் பயன்கள் குறித்து எழுதுக. (பக் - 103)
6. மொழிபெயர்ப்பு சமூகத்திற்கு எவ்வாறு உதவுகிறது?
7. சின்னமனூர்ச் செப்பேடு புலப்படுத்தும் செய்தி யாது? (பக் - 100)
8. தமிழ் மொழிபெயர்ப்பு குறித்து குலோத்துங்கன் கூறுவது யாது? (பக் - 104)
9. அன்றாட வாழ்வில் மொழிபெயர்ப்பின் பங்கு யாது?
10. மொழிபெயர்ப்பால் கிடைக்கும் அடையாளங்கள் யாவை?
11. வளரும் நாடுகளக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு உதவுகிறது?

### நீதிவெண்பா

1. சதம் என்றால் ***நூறு*** என்று பொருள்.
2. சதாவதானம் எனும் கலையில் சிறந்து விளங்கியவர் ***செய்குதம்பிப் பாவலர்.***
3. செய்குத்தம்பிப் பாவலர் ***பதினைந்து*** வயதில் செய்யுள் இயற்றும் திறன் பெற்றார்.
4. செய்குத்தம்பிப் பாவலர் ***கன்னியாகுமரி*** மாவட்டம் ***இடலாக்குடி*** என்னும் ஊரைச் சேர்ந்தவர்.
5. சதாவதானி என்று பாராட்டுப் பெற்றவர் ***செய்குத்தம்பிப் பாவலர்.***
6. கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது ***சங்க*** இலக்கியம்.
7. தோண்டும் அளவு ஊறும் நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது ***திருக்குறள்.***
8. செய்குத்தம்பிப் பாவலர் சதாவதானி என்று பாராட்டப்பட்ட ஆண்டு ***1907.***
9. செய்குத்தம்பிப் பாவலர் பிறந்த ஆண்டு ***1874.***
10. செய்குத்தம்பிப் பாவலர் மறைந்த ஆண்டு ***1950.***

## வினாக்கள் :

1. சதாவதானம் என்றால் என்ன? (பக் - 106)



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

2. செய்குதம்பிப் பாவலர் குறிப்பு வரைக. (பக் - 106)
3. நீதிவெண்பா உணர்த்தும் கல்வியின் சிறப்பு யாது?
4. செய்குதம்பிப் பாவலரைப் போற்றும் விதமாக அரசு செய்தது யாவை?
5. கல்வியின் சிறப்பாக இலக்கியங்கள் கூறும் கருத்து யாது?

## திருவிளையாடற்புராணம்

1. திருவிளையாடற்புராணம் இயற்றியவர் ***பரஞ்சோதி முனிவர்.***
2. திருவிளையாடற்புராணம் ***மூன்று*** காண்டங்களை உடையது.
3. திருவிளையாடற்புராணம் ***64*** படலங்களை உடையது.
4. பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர் ***திருமறைக்காடு (வேதாரண்யம்).***
5. பரஞ்சோதி முனிவர் ***பதினேழாம்*** நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
6. மதுரை பதிற்றுப்பத்தந்தாதி இயற்றியவர் ***பரஞ்சோதி முனிவர்.***
7. கேள்வியினான் - இலக்கணக்குறிப்பு ***வினையாலணையும் பெயர்.***
8. "கவரி" என்ற சொல்லின் பொருள் ***சாமரை.***
9. "தார்" என்ற சொல்லின் பொருள் ***மாலை.***
10. "முனிவு" என்ற சொல்லின் பொருள் ***சினம்.***
11. "தமர்" என்ற சொல்லின் பொருள் ***உறவினர்.***

## வினாக்கள் :

1. பரஞ்சோதி முனிவர் குறிப்பு வரைக. (பக் - 110)
2. பரஞ்சோதி முனிவர் இயற்றிய பிற நூல்களைக் குறிப்பிடுக. (பக் - 110)
3. திருவிளையாடற்புராணத்தின் காண்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (பக் - 110)
4. சிவபெருமான் கடம்பவனத்தை விட்டு எங்கு குடியேறினார்? (பக் - 109)
5. இடைக்காடனார் மன்னனின் அவையில் கவிதை படித்தல் நிகழ்ச்சியை விளக்குக. (பக் - 109)
6. குசேல பாண்டியன் செய்த தவறு யாது?
7. பண்டைய காலத்தில் புலவர்களுக்குக் கிடைக்கும் சிறப்புகள் யாவை?
8. மன்னனது மாளிகையின் தோற்றம் குறித்து எழுதுக.
9. மன்னன் இடைக்காடனாருக்குச் செய்த சிறப்பு யாது?
10. இறைவன் கடம்பவனக் கோவிலுக்கு மீண்டும் ஏன் திரும்பினார்?

## புதிய நம்பிக்கை

1. புதிய நம்பிக்கை கதையின் ஆசிரியர் ***கமலாலயன்.***



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

2. மேரியின் ஆசிரியர் ***மிஸ் வில்ஸன்***.
3. கமலாலயனின் இயற்பெயர் ***வே.குணசேகரன்***.
4. உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்க கறுப்பினப் பெண்மணி ***மேரி மெக்லியோட் பெத்யூன்.***

## ***வினாவிடை வகைகள்***

## ***பொருள்கோள்***

1. வினா ***ஆறு*** வகைப்படும்.
2. மாணவரிடம் இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று ஆசிரியர் கேட்கும் வினா ***அறிவினா.***
3. ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படும் வினா ***ஐயவினா***.
4. தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு கேட்கப்படும் வினா ***கொளல் வினா***.
5. ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது ***ஏவல் வினா***.
6. விடை ***எட்டு*** வகைப்படும்.
7. சுட்டு விடை, மறைவிடை, நேர்விடை ஆகியவை ***வெளிப்படை*** விடைகளாகும்.
8. கடைக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் போகமாட்டேன் என மறுத்துக் கூறும் விடை ***மறைவிடை***.
9. கடைக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் போவேன் என உடன்பட்டு கூறும் விடை ***நேர்விடை.***
10. இது செய்வாயா? என்று வினவியபோது நீயே செய் என்று கூறுவது ***ஏவல் விடை***.
11. உனக்குக் கதை எழுதத் தெரியுமா? என்ற வினாவிற்குக் கட்டுரை எழுதத் தெரியும் என்று கூறுவது ***இனமொழி விடை***.
12. நீ விளையாடவில்லையா என்ற வினாவிற்குக் கால் வலிக்கும் என்று உறுவதை உரைப்பது ***உறுவது கூறல் விடை***.
13. செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள்கொள்ளும் முறைக்குப் ***பொருள்கோள்*** என்று பெயர்.
14. பொருள்கோள் ***எட்டு*** வகைப்படும்.
15. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்று நீரின் போக்கைப் போல நேராகவே பொருள்கொள்ளுமாறு அமைந்தால் அவை ***ஆற்றுநீர்ப்*** பொருள்கோள் எனப்படும்.
16. ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல் நிறையாக அமைந்து வருவது ***நிரல்நிறைப் பொருள்கோள்.***



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

17. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர் இதில் பயின்று வரும் பொருள்கோள் ***எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்***.

18. ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு இக்குறளில் பயின்று வரும் பொருள்கோள் ***கொண்டுகூட்டுப் பொருள்கோள்.***

## வினாக்கள் :

1. அறிவினா என்றால் என்ன? (பக் - 117)
2. அறியாவினா என்றால் என்ன? (பக் - 117)
3. அங்கு கிடப்பது பாம்போ? கயிறோ? எவ்வகை வினா?
4. கொளல் வினா என்றால் என்ன? (பக் - 117)
5. கொடை வினா என்றால் என்ன? (பக் - 117)
6. ஏவல் வினா என்றால் என்ன? (பக் - 117)
7. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. உடன்பாட்டுக் கூறும் விடையின் பெயர் என்ன?
9. வெளிப்படை விடைகள் எத்தனை? அவை யாவை?
10. குறிப்பு விடைகள் எத்தனை? அவை யாவை?
11. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12. மறை விடை என்றால் என்ன?
13. சுட்டு விடை என்றால் என்ன?
14. ஏவல் விடை என்றால் என்ன?
15. வினா எதிர் வினாதல் விடை என்றால் என்ன?
16. இனமொழி விடை என்றால் என்ன?
17. உற்றதுரைத்தல், உறுவது கூறல் குறித்து எழுதுக.
18. பொருள்கோள் என்றால் என்ன?
19. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
20. ஆற்றுநீர்ப் பொருள்கோளைச் சான்றுடன் விளக்குக.
21. நிரல்நிறைப் பொருள்கோளைச் சான்றுடன் விளக்குக.
22. கொண்டுகூட்டுப் பொருள்கோளைச் சான்றுடன் விளக்குக.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

# தமிழ்
## இயல் - 6 : நிகழ்கலை

1. கரகாட்டம் ***கும்பாட்டம்*** என அழைக்கப்படுகிறது.
2. நீரற வறியாக் கரகத்து என்று கூறும் நூல் ***புறநானூறு***.
3. கரகாட்டத்திற்கு அடிப்படை ***குடக்*** கூத்து ஆகும்.
4. கரகாட்டத்திற்கு அடிப்படை குடக்கூத்து என்று குறிப்பிடும் நூல் ***சிலப்பதிகாரம்.***
5. மாதவி ஆடிய ***பதினொரு*** வகை ஆடல்களில் குடக்கூத்தும் ஒன்று.
6. மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு ஆடும் ஆட்டம் ***மயிலாட்டம்***.
7. கா என்பதற்குப் ***பாரந்தாங்கும் கோல்*** என்று பொருள்.
8. சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது ***காவடியாட்டம்.***
9. இலங்கை, மலேசியா உட்பட, புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் ***காவடியாட்டம்*** ஆடப்படுகிறது.
10. வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் ***தேவராட்டம்.***
11. தேவராட்டம் பொதுவாக ***உறுமி*** என அழைக்கப்படும்.
12. தேவராட்டத்தில் பெரும்பான்மையாக ***எட்டு*** முதல் ***பதின்மூன்று*** கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது.
13. தேவராட்டம் குறிப்பாகச் ***சடங்கு*** சார்பாக ஆடப்படுகின்றது.
14. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி ***தேவதுந்துபி.***
15. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை ***சேவையாட்டம்***.
16. "போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் ***பொய்க்கால் குதிரையாட்டமும்*** ஒன்று.
17. அரசன் அரசி வேடமிட்டு ஆடப்படும் ஆட்டம் ***புரவி ஆட்டம்.***
18. புரவி ***நாட்டியம்*** என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.
19. குதிரையாட்டம் ***மராட்டியர்*** ஆட்சி காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.
20. பொய்க்கால் குதிரையாட்டம் இராஜஸ்தானில் ***கச்சிகொடி*** என்று அழைக்கப்படுகிறது.
21. பொய்க்கால் குதிரையாட்டம் கேரளாவில் ***குதிரைக்களி*** என்று அழைக்கப்படுகிறது.
22. தப்பு என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே ஆடும் ஆட்டம் ***தப்பாட்டமாகும்***.
23. தப்பாட்டம் ***தப்பட்டை, தப்பு*** என்றும் அழைக்கப்படுகிறது.
24. தப்பாட்ட இசையை ***பறை*** எனவும் அழைப்பர்.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

25. "தகக தகததகக தந்தத்த தந்தகக" என்று கூறும் நூல் ***திருப்புகழ்***.

26. திருப்புகழ் பாடியவர் ***அருணகிரிநாதர்.***

27. தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாக ***பறை*** இடம்பெறுகிறது.

28. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது ***புலி ஆட்டமாகும்.***

29. பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் ஒன்று ***புலி ஆட்டம்.***

30. நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே ***தெருக்கூத்து.***

31. தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர் ***ந.முத்துசாமி என்ற கலைஞாயிறு.***

32. ந.முத்துசாமி இந்திய அரசின் ***தாமரைத்திரு (பத்மஸ்ரீ)*** விருதை பெற்றுள்ளார்.

33. நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் ***ந.முத்துசாமி.***

34. ந.முத்துசாமிக்கு தமிழ்நாடு அரசு தந்த விருது ***கலைமாமணி***.

35. மழை வேண்டி நிகழ்த்தப்படும் தெருக்கூத்து ***அருச்சுனன் தபசு***.

36. தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் ***தோற்பாவைக் கூத்து*** என்னும் பெயர் பெற்றது.

37. தோற்பாவைக் கூத்து திருக்குறளில் ***மரப்பாவை*** என அழைக்கப்படுகிறது.

38. தோற்பாவைக் கூத்து ***கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம்*** என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

39. கரகாட்டத்தின் துணையாட்டமாக ***மயிலாட்டம்*** ஆடப்படுகிறது.

40. ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ***ஆண்கள்*** ஆடுவதே வழக்கில் உள்ளது.

***வினாக்கள் :***

1. கரகாட்டம் என்றால் என்ன? (பக் - 128)
2. கரகாட்டம் எந்தெந்த மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது?
3. மயிலாட்டம் என்பது யாது? (பக் - 129)
4. மயிலாட்டத்தின் அடவுகளாகக் கலைஞர்கள் குறிப்பிடுவன எவை? (பக் - 129)
5. காவடியாட்டம் என்பது யாது? (பக் - 129)
6. காவடியின் வகைகளை எழுதுக. (பக் - 129)
7. ஒயிலாட்டம் என்றால் என்ன? (பக் - 129)
8. ஒயிலாட்டத்தில் பயன்படும் இசைக்கருவிகளை எழுதுக. (பக் - 129)
9. சேவையாட்டம் என்பது எது? (பக் - 129-130)
10. பொய்க்கால் குதிரையாட்டம் குறித்து எழுதுக. (பக் - 130)
11. பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்களை எழுதுக. (பக் - 130)
12. தப்பாட்டத்தின் வேறு பெயரினை எழுதுக. (பக் - 130)

13. தப்பாட்டம் என்பது யாது? (பக் - 130)

14. புலி ஆட்டம் என்றால் என்ன? (பக் - 131)

15. தெருக்கூத்து குறித்து எழுதுக. (பக் - 131)

16. அருச்சுனன் தபசு எது வேண்டி நிகழ்த்தப்படும் கூத்து? (பக் - 132)

17. தோற்பாவைக் கூத்து பற்றி எழுதுக. (பக் - 132)

## பூத்தொடுத்தல்

1. மலர்கள் தரையில் நழுவும், எப்போது? ***தளரப் பிணைத்தால்.***
2. பூத்தொடுத்தல் கவிதையை எழுதியவர் ***உமா.மகேஸ்வரி.***
3. உமா மகேஸ்வரி பிறந்த மாவட்டம் ***மதுரை***.
4. உமா மகேஸ்வரி தற்போது ***ஆண்டிப்பட்டி*** ஊரில் வாழ்ந்து வருகிறார்.
5. உமா மகேஸ்வரி இயற்றிய கவிதை தொகுதி ***நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை*** ஆகியன.

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

1. சிற்றிலக்கியம் ***96*** வகைப்படும்.
2. தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று ***பிள்ளைத்தமிழ்***.
3. பிள்ளைத்தமிழ் ***பத்து*** பருவங்களை உடையது.
4. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழை இயற்றியவர் ***குமரகுருபரர்***.
5. செங்கீரைப் பருவத்தின் மாதங்கள் ***5 மற்றும் 6 மாதங்கள்***.
6. குமரகுருபரரின் காலம் ***17ஆம் நூற்றாண்டு***.
7. பிள்ளைத்தமிழுக்குரிய பொதுவான பருவங்கள் மொத்தம் ***7***.
8. பண்டி என்ற சொல்லின் பொருள் ***வயிறு***.
9. ஆடுக இலக்கணக் குறிப்பு தருக ***வியங்கோள் வினைமுற்று***.
10. செங்கீரைப் பருவத்தில் ***எட்டாம்*** பாடல் நமக்குப் பாடப்பகுதியாக வந்துள்ளது.

**பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 1. கிண்கிணி | - | காதில் அணிவது | 4 |
| 2. அரைநாண் | - | நெற்றியில் அணிவது | 3 |
| 3. சுட்டி | - | காலில் அணிவது | 1 |
| 4. குழை | - | தலையில் அணிவது | 5 |
| 5. சூழி | - | இடையில் அணிவது | 2 |

**வினாக்கள்**

1. பிள்ளைத் தமிழ் என்றால் என்ன?
2. பிள்ளைத் தமிழ் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களைக் குறிப்பிடுக.
4. பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களைக் குறிப்பிடுக.



**வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122**

5. "பதிந்து" - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
6. குமரகுருபரர் - குறிப்பு வரைக.
7. குமரகுருபரர் இயற்றிய பிற நூல்களை எழுதுக.
8. செங்கீரைப் பருவம் குறித்து எழுதுக.
9. குமரகுருபரர் எவ்வெவ் மொழிகளில் வல்லவர்?
10. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் குறிப்பிடும் அணிகலன்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

## ***கம்பராமாயணம்***

1. கம்பராமாயணம் ***ஆறு*** காண்டங்களை உடையது.
2. கம்பராமாயணத்தில் ***118*** படலங்கள் உள்ளன.
3. கம்பராமாயணத்தின் ஆசிரியர் ***கம்பர்***.
4. கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர் ***இராமாவதாரம்***.
5. கம்பராமாயணத்தை வடமொழியில் எழுதியவர் ***வான்மீகி***.
6. திருக்கை வழக்கத்தை இயற்றியவர் ***கம்பர்***.
7. கம்பராமாயணம் ***வழி*** நூல் ஆகும்.
8. கங்கைப் படலத்தின் வேறு பெயர் ***குகப்படலம்***.
9. வெய்யோன் என்ற சொல்லின் பொருள் ***பகலவன்***.
10. உள்ளதை உணர்ந்தபடி கூறுவது ***கவிதை***.
11. கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் என்று பெருமைப்படுபவர் ***பாரதி***.
12. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்றவர் ***கம்பர்***.

**வினாக்கள்**

1. மோதி உடம்புதோறு உயிரென உலாயதன்றே உவமையை விளக்குக. (பக் - 136)
2. கோசல நாட்டில் ஏன் வண்மையில்லை? திண்மையில்லை? (பக் - 137)
3. கோசல நாட்டின் வளத்தை எழுதுக. (பக் - 137)
4. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களை எழுதுக. (பக் - 138)
5. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (பக் - 138)
6. கம்பர் இயற்றிய வேறு நூல்களைக் குறிப்பிடுக. (பக் - 138)
7. இராமனுடைய அழகிற்கு எவற்றையெல்லாம் ஆசிரியர் ஒப்பிடுகிறார்? (பக் - 137)
8. கும்பகருணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? (பக் - 138)
9. சரயு ஆறு எங்கெங்கு பாய்ந்து செல்கிறது? (பக் - 136)
10. மருத நிலத்தின் சிறப்பினை எழுதுக. (பக் - 137)

## ***பாய்ச்சல்***

**கதை மாந்தர்கள் :**

**அழகு**
**இராமு**
**அனுமார் வேடமிட்ட ஒருவன்**



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

**மேலக்காரர்**

**ஊர்மக்கள்**

1. பாய்ச்சல் கதையின் ஆசிரியர் ***சா.கந்தசாமி***.
2. பாய்ச்சல் ***தக்கையின் மீது நான்கு கண்கள்*** சிறுகதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
3. சா.கந்தசாமி இயற்றிய புதினத்தின் பெயர் ***சாயாவனம்***.
4. சா.கந்தசாமியின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ***விசாரணைக் கமிஷன்***.
5. சா.கந்தசாமி இயற்றிய குறும்படத்தின் பெயர் ***சுடுமண் சிலைகள்***.
6. தொலைந்து போனவர்கள், சூர்ய வம்சம், சாந்தகுமாரி முதலிய புதினங்களை எழுதியவர் ***சா. கந்தசாமி***.
7. ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டியோர் என்று கூறும் நூல் ***சிலப்பதிகாரம்.***
8. தொண்டி ***இராமநாதபுரம்*** மாவட்டத்தில் உள்ளது.

## ***அகப்பொருள் இலக்கணம்***

1. பொருள் என்பது ***ஒழுக்கமுறையைக்*** குறிக்கும்.
2. தமிழர் வாழ்வியலை ***அகம், புறம்*** எனப் பிரித்தனர்.
3. தலைவன் தலைவி இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது ***அகத்திணை.***
4. அகப்பொருள் பாடுவதற்குரிய பொருள்கள் மொத்தம் ***3***.
5. நிலமும் பொழுதும் ***முதற்பொருள்*** எனப்படும்.
6. மலையும் மலை சார்ந்த இடமும் ***குறிஞ்சி***.
7. முல்லை ***காடும் காடு சார்ந்த இடமும்***.
8. கடலும் கடல் சார்ந்த இடம் ***நெய்தல்***.
9. சுரமும் சுரம் சார்ந்த இடம் ***பாலை***.
10. வயலும் வயல் சார்ந்த இடம் ***மருதம்***.
11. பொழுது ***இரண்டு*** வகைப்படும்.
12. ஓராண்டின் ஆறு கூறுகளைப் ***பெரும்பொழுது*** என்று அழைப்பர்.
13. ஒரு நாளின் ஆறு கூறுகளைச் ***சிறுபொழுது*** என்று அழைப்பர்.
14. கார் காலத்தின் காலம் ***ஆவணி, புரட்டாசி***.
15. மார்கழி, தை ***முன்பனி*** காலத்திற்குரியன.
16. ஐப்பசி, கார்த்திகை ***குளிர்*** காலத்திற்குரியன.
17. முதுவேனிற் காலத்தின் மாதம் ***ஆனி, ஆடி***.
18. மாசி, பங்குனி ***பின்பனி*** காலத்திற்குரியன.
19. சித்திரை, வைகாசி ***இளவேனிற்*** காலத்திற்குரியன.
20. காலை 10 மணி முதல் 2 மணி வரை உள்ள பொழுது ***நண்பகல்***.
21. வைகறை என்பது இரவு 2 மணி முதல் ***காலை 6 மணி*** வரை.
22. மாலை என்பது மாலை ***6*** மணி முதல் இரவு ***10*** மணி வரை.
23. "எல்" என்ற சொல்லின் பொருள் ***ஞாயிறு.***
24. குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுது ***யாமம்.***
25. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது ***கார்காலம்***.
26. இளவேனில், முதுவேனில், பின்பனி ***பாலை*** நிலத்திற்குரிய பெரும்பொழுதாகும்.
27. "எற்பாடு" ***நெய்தல்*** நிலத்திற்குரிய சிறுபொழுது.
28. ஆறுபெரும் பொழுதுகளும் ***மருதம், நெய்தல்*** நிலத்திற்குரியன.

29. ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவற்றை ***கருப்பொருள்கள்*** என அழைப்பர்.

30. கருப்பொருள்கள் ***பதின்மூன்று*** வகைப்படும்.

**வினாக்கள்**

1. பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. அகத்திணை என்பது யாது?
3. பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. சிறுபொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. கருப்பொருள் என்றால் என்ன?
6. முதற்பொருள் என்றால் என்ன?
7. அன்பின் ஐந்திணைகளை எழுதுக.
8. ஐந்திணைகளுக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுதினை குறிப்பிடுக.
9. ஐவகை நிலங்களும் அவற்றின் இடத்தையும் எழுதுக.
10. குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.
11. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் எவையேனும் நான்கினை எழுதுக.
12. பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்களை எழுதுக.
13. நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.
14. மருதத்திணைக்குரிய கருப்பொருள்களுள் எவையேனும் ஆறினை எழுதுக.
15. வைகறைக்குரிய கால அளவை எழுதுக.

## ***திருக்குறள்***

## வினாக்கள் :

1. அமைச்சர் என்பதன் இலக்கணம் யாது?
2. அமைச்சரிடம் அமைய வேண்டிய திறன்கள் யாவை?
3. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?
4. தீதின்றி வந்த பொருளின் பயன் யாது?
5. உலகத்தால் யாரை உறவாகக் கொண்டு போற்றுவர்?
6. சான்றோர், கயவர் இயல்புகள் யாவை?
7. சொற்பொருள் பின்வரு நிலையணி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
8. உவமையணி என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
9. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.
10. சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோல்
    கொல்லப் பயன்படும் கீழ் - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

# இயல் - 7
## சிற்றகல் ஒளி

1. சத்தியாக்கிரகம் **1906** ஆண்டு தொடங்கப்பட்டது
2. சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியவர் - **காந்தியடிகள்**
3. சத்தியாக்கிரகம் **தென்னாப்பிரிக்கா** நாட்டில் தொடங்கப்பட்டது
4. சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர் **வ.உ. சிதம்பரனார்.**
5. ம.பொ.சிவஞானம் **சால்வன்குப்பம்** பகுதியில் பிறந்தார்.
6. ம பொ. சிவஞானத்தின் இயற்பெயர் **ஞானப்பிரகாசம்**
7. ம.பொ. சிவஞானத்தின் பெற்றோர் **பொன்னுசாமி. சிவகாமி**
8. சிலம்புச் செல்வர் என்று அழைக்கப்படுபவர் **ம.பொ.சி**
9. பேராயக் கட்சி என்பது **காங்கிரஸ்கட்சி** குறிக்கும்
10. 'எனது போராட்டம்' என்ற தன் வரலாற்றுக் கட்டுரை எழுதியவர் **ம.பொ.சி**
11. ம.பொ.சி **1952** முதல் **1954** வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்
12. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலை எழுதியவர் **ம.பொ.சி**
13. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலுக்காக **1966** ஆம் ஆண்டு **சாகித்திய அகாதெமி** விருது பெற்றார்.
14. தமிழக அரசு ம.பொ.சியின் சிலையை **திருத்தணியிலும். சென்னை தியாகராய நகரிலும்** வைத்துள்ளது
15. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது **சிலப்பதிகாரம்**
16. ம.பொ.சி. வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட நாள்**1942 ஆஸ்ட் 13**
17. நாகர்கோவிலில் தெற்கெல்லை கிளர்ச்சிக்காக ம.பொ.சி பேசிய இடம் **வடிவீசுரம்**
18. பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அழகிய கையெழுத்துச் சுவடி கண்டுபிடிக்கப்பட்ட அருங்காட்சியகம் **வியன்னாவில்** உள்ளது

**வினாக்கள்**

1. ம.பொ.சிவஞானம் எங்கு எப்போது பிறந்தார்? (பக் - 160)
2. ம.பொ.சிவஞானத்தின் பெற்றோர்கள் யார்? (பகட — 160)
3. ம.பொ.சிவஞானத்தின் பள்ளிப்படிப்பைக் குறித்து எழுதுக (பக் - 160)
4. பேராயக் கட்சி என்றால் என்ன? (பக் - 161)
5. ம.பொ.சி இளமையில் படித்த அம்மானைப் பாடல்கள் யாவை? (பக் - 161)
6. மார்ஷல் ஏ.நேசமணி குறித்து விளக்குக (பக் - 163)
7. ம.பொ.சிவஞானத்திற்குத் தமிழக அரசு செய்த சிறப்பு யாது? (பக் - 164)
8. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர். ம. பொ. சி. என்பதற்குச் சான்று தருக. (பக் - 10)
9. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடஞ்சுட்டுப் பொருள் விளக்குக (163)
10. ஆறு மாதக் கடுங்காவல் குறித்து எழுதுக.
11. தமிழகம் பற்றிய கனவு குறித்து ம.பொ.சி கூறுவது யாது? (பக் - 162)

## ஏர் புதிதா?

1. சங்கத் தமிழரின் திணைவாழ்வு **வேளாண்மையை** அடிப்படையாகக் கொண்டது
2. உழுவோர் உலகத்தார்க்கு **அச்சாணி** எனப் போற்றப்பட்டனர்
3. ஏர் புதிதா? எனும் கவிதையை இயற்றியவர் **கு.ப. ராஜகோபாலன்**
4. கு.ப.ரா **கும்பகோணம்** ஊரில் பிறந்தவர்
5. கு.ப.ரா **தமிழ்நாடு. பாரதமணி. பாரததேவி. கிராம ஊழியன்** ஆகிய இதழ்களில் ஆசிரியராக பணிபுரிந்தார்
6. அகலிகை. ஆத்ம சிந்தனை எனும் நூலை இயற்றியவர் **கு.ப.ராஜகோபாலன்**
7. வேளாண் செழிக்கவும் மானுடம் தழைக்கவும் நடத்தப்படுவது. **பொன்னேர் பூட்டுதல்**

**வினாக்கள்**

1. பொன் ஏர் பூட்டுதல் என்றால் என்ன?
2. கு.ப.இராஜகோபாலன் ஆசிரியராக பணிபுரிந்த இதழ்கள் யாவை?
3. உழவுத் தொழில் பற்றி உனக்குத் தெரிந்த சில கருத்துக்களைக் கூறுக?
4. எவையெல்லாம் புதிது என்று கு.பா.ரா கூறுகிறார்?
5. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்

## மெய்க்கீர்த்தி

1. **முதலாம் இராசராசன்** காலந்தொட்டு மெய்க்கீர்த்திகல் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன.
2. இரண்டாம் இராசராசனின் பட்டப் பெயர்களுள் ஒன்று **கோப்பரகேசரி**
3. இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்திகள் மொத்தம் **2**
4. இரண்டாம் இராசராசனின் மெய்ககீர்த்தி **91** வரிகளைக் கொண்டது
5. திருபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டத்திற்கு உரியவன் **இரண்டாம் இராசராச சோழன்**

**பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. உருவம் | - | செவிலியர் தாய் | **4** |
| 2. மை | - | மயக்கம் | **3** |
| 3. மருள் | - | வடிவம் | **1** |
| 4. கைத்தாயார் | - | இருள் | **2** |

**வினாக்கள்**

1. மெய்க்கீர்த்தி என்றால் என்ன?
2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
3. இராசராச சோழன் எவ்வாறு காவல் காக்கின்றான்?
4. இராசராசன் நாட்டின் இயல்வுகளைக் கூறுக.
5. இராண்டாம் இராசராசன் பெற்ற பட்டங்கள் யாவை?

**சிலப்பதிகாரம்**

1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் **இளங்கோவடிகள்**
2. சிலப்பதிகாரத்தில் **மூன்று காண்டங்கள் உள்ளன.**
3. சிலப்பதிகாரத்தில் **30** காதைகள் உள்ளன
4. சுண்ணம் என்ற சொல்லின் பொருள் **நறுமணப்பொருள்**


வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

5. பாசவர் என்பது **வெற்றிலை** விற்போரைக் குறிக்கும்
6. நொடை என்ற சொல்லின் பொருள் **விலை**
7. துகிர் என்ற சொல்லின் பொருள் **பவளம்**

8. தூசு என்ற சொல்லின் பொருள் **பட்டு**
9. இளங்கோவடிகள் **சேர** நாட்டைச் சேர்ந்தவர்
10. இளங்கோவடிகளின் காலம் **கி.பி 2ஆம் நூற்றாண்டு**
11. சிலப்பதிகாரமும் மனிமேகலையும் **இரட்டைக்** காப்பியங்களாகும்
12. சிலப்பதிகாரம் பிரித்து எழுது **சிலம்பு + அதிகாரம்**
13. வெறுக்கை என்ற சொல்லின் பொருள் **செல்வம்.**
14. பயில் தொழில் இலக்கணக் குறிப்பு தருக **வினைத்தொகை**
15. புகார்க் காண்டத்தில் **இந்திரவிழா ஊரெடுத்த** காதை நமக்குப் பாடமாக வந்துள்ளது
16. சிலப்பதிகாரம் **ஐம்பெருங்காப்பியங்களில்** ஒன்று
17. அடிகள் நீரே அருளுக என்று கூறியவர் **சீத்தலைச் சாத்தனார்.**
18. நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் என்று கூறியவர் **இளங்கோவடிகள்**
19. கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்கு அழைத்துச் சென்றவர் **கவுந்தியடிகள்**
20. காருகர் என்று அழைக்கப்படுபவர் **நெய்பவர்**
21. மூவேந்தர்களின் செய்திகளைப் பற்றி கூறும் நூல் **சிலப்பதிகாரம்**
22. சீத்தலைச் சாத்தனார் இயற்றிய நூல் **மணிமேகலை**
23. தூசும் துகிரும் ஆரமும் துகிலும் இத்தொடரில் இடம்பெற்றுள்ள சீர் எதுகை **துகிரும். துகிலும்**

<u>**பொருத்துக**</u>

| | | | |
|---|---|---|---|
| 1. கிழி | - | நறுமணப்பொடி | **4** |
| 2. துகிர் | - | பட்டு | **3** |
| 3. தூசு | - | துணி | **1** |
| 4. சுண்ணம் | - | பவளம் | **2** |

| | | | |
|---|---|---|---|
| 1. புகார்க்காண்டம் | - | 13 காதைகள் | **2** |
| 2. மதுரைக் காண்டம் | - | 7 காதைகள் | **3** |
| 3. வஞ்கிக் காண்டம் | - | 10 காதைகள் | **1** |

<u>**வினாக்கள்**</u>

1. சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
2. சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறது?
3. இரட்டைக் காப்பியங்களை எழுதுக?
4. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
5. ஏழிசைகளை எழுதுக.
6. இளங்கோவடிகள் - குறிப்பு வரைக.
7. மயங்கிய — பகுபத உறுப்பிலக்கணம் தருக.
8. உரைப்பாட்டு மடை என்றால் என்ன?
9. சிலப்பதிகாரம் குறிப்பிடும் மூன்று காண்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
10. மருவூர்ப்பாக்கத்தில் வணிகம் செய்யும் விலை உயர்ந்த பொருட்கள் யாவை?

11. சிலப்பதிகாரம் குறிப்பு வரைக.
12. பாசவர். வாசவர். பல்நிண விலைஞர். உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

## மங்கையராய்ப் பிறப்பதற்கே

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதில் பங்குபெறுபவர்கள்.

1. முகில் நாச்சி - மாறு வேடம் - எம்.எஸ். சுப்புலட்சுமி
2. மோகனா - மாறு வேடம் - பாலசரஸ்வதி
3. வளர்மதி - மாறு வேடம் - ராஜம் கிருஷ்ணன்
4. அன்பரசி - மாறு வேடம் - கிருஷ்ணம்மாள் ஜெகந்தாதன்
5. மாதவி - மாறு வேடம் - சின்னப்பிள்ளை

மற்றும் தொகுப்பளர் ஒருவர்

1. பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியும் மேதைகள் பலர் முன்பு கச்சேரி நிகழ்த்தியவர் **எம்.எஸ். சுப்புலட்சுமி**
2. எம்.எஸ். சுப்புலட்சுமி நடித்த திரைப்படத்தின் பெயர் **மீரா**
3. காந்தியடிகளைச் சந்தித்த போது எம்.எஸ். சுப்புலட்சுமி பாடிய பாடல் **இரகுபதி இராகவ இராஜாராம்**
4. எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு தாமரையணி. விருது கிடைத்த ஆண்டு **1954.**
5. 1974 இல் நோபல் பரிசுக்கு இணையான **மகசேசே** விருதை எம்.எஸ். சுப்புலட்சுமி பெற்றார்.
6. எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு இந்தியா அளித்த விருது **இந்திய மாமணி**
7. இந்திய அரசின் தாமரைச் செவ்வணி விருது பெற்றவர் **பாலசரஸ்வதி**
8. வேருக்கு நீர் எனும் புதினத்தை எழுதியவர் **இராஜம் கிருஷ்ணன்**
9. வேருக்கு நீர் எனும் புதினத்திற்கு **சாகித்திய அகாதெமி** விருது கிடைத்தது.
10. நீலகிரி. படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்து இராஜம் கிருஷ்ணன் செய்த புதினத்தின் பெயர். **குறிஞ்சித் தேன்.**
11. இந்திய அரசின் **தாமரைத்திருவிருது.** சுவீடன் அரசின் **வாழ்வுரிமை விருது.** சுவிட்சர்லாந்து அரசின் **காந்தி அமைதி விருது.** பெற்றவர் **கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்** ஆவர்.
12. காந்தியடிகளின் **சர்வோதய** இயக்கத்தில் களப்பணி ஆற்றியவர்.
13. பெண் ஆற்றல் விருது. ஔவை விருது. பொதிகை விருது. தாமரைத்திரு விருது ஆகியவற்றைப் பெற்றவர் **சின்னப்பிள்ளை**

## புறப்பொருள் இலக்கணம்

1. அகப்பொருள் என்பது **அன்பின் ஐந்திணை** பற்றியது
2. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது **புறத்திணை.**
3. புறத்திணை **பன்னிரெண்டு (12)** வகைப்படும்
4. ஆநிரை கவர்தல் **வெட்சித்திணை** எனப்பட்டது
5. ஆநிரைகளை மீட்டல் **கரந்தைத்** திணை
6. மண்ணாசைக் கருதி போருக்குச் செல்வது **வஞ்சித்திணை.**
7. கோட்டையை முற்றுகையிடுதல் **நொச்சித்திணை**

8. வெற்றி பெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது **வாகைத்திணை**
9. பாடாண்திணை பிரித்து எழுதுக **பாடு + ஆண் + திணை**
10. பாடுவதற்குரிய ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றி கூறுவது **பாடாண்திணை**
11. ஒரு தலைக் காமம் என்பது **கைக்கிளை**
12. பொருந்தாக் காமம் என்பது **பெருந்திணை**
13. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் **வலிமையை நிலை நாட்டல்**
14. தும்பைத் திணையில் போரைத் தொடங்கும் நிகழ்வாக **ஆநிரை கவர்தல்** மேற்கொள்ளப்பட்டது
15. வட்கார்மேற் செல்வது **வஞ்சித்திணை**

**வினாக்கள்**

1. புறத்திணை என்பது யாது? (பக் - 176)
2. புறத்திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. மதில் போர் பற்றிய திணைகள் யாவை? (பக் - 177)
4. வெட்சித்திணை என்பது யாது? (பக் - 176)
5. கரந்தைத்திணை என்பது யாது? (பக் - 176)
6. காஞ்சித்திணை என்றால் என்ன? (பக் - 176)
7. தும்பைத்திணை என்பது யாது? (பக் - 177)
8. வாகைத்திணை என்பது யாது? (பக் - 177)
9. பாடாண்திணை என்றால் என்ன? (பக் - 177)
10. கைக்கிளை குறித்து எழுதுக? (பக் - 177)
11. பெருந்திணை என்பது யாது? (பக் - 177)
12. பொதுவியல் திணை என்றால் என்ன? (பக் - 177)
13. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

## தமிழ்
## இயல் - 8 : சங்க இலக்கியத்தில் அறம்

1. சமூகக் கடலின் ஒரு துளி ***மனிதன்***. அவன் தனியானவன் அல்லன்.
2. மனிதனுக்குள்ளே ***சமூகம்***.
3. "கவிதை வாழ்க்கையின் திறனாய்வு" என்று திறனாய்வாளர் ***ஆர்னால்டு*** கூறுகிறார்.
4. ***அறம்*** செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது.
5. அறநெறிக்கால அறங்கள் ***சமயம்*** சார்ந்தவை.
6. அறம் பற்றிய ***அறிவுரைகள்*** அரசர்களை முதன்மைப்படுத்திப் பாடப்பட்டன.
7. "அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது ***புறநானூறு***.
8. வீரத்தைப் போலவே ***கொடையும்*** தமிழர்களால் விரும்பப்பட்டது.
9. கொடையின் சிறப்பால் போற்றப்பட்ட வள்ளல்கள் ***எழுவர்***.
10. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்தரனாரின் பேருள்ளம் ***புறநானூற்றில்*** புலப்படுத்தப்பட்டிருக்கிறது.
11. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ***ஔவையார்***.
12. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் ***உதவியாண்மை*** என்று குறிப்பிடுகிறார்.
13. "இல்லோர் ஒக்கல் தலைவன்", பசிப்பிணி மருத்துவன் என்றெல்லாம் போற்றப்பட்டவர்கள் ***வள்ளல்கள்***.
14. வள்ளலின் பொருள் இரவலனின் ***பொருள்*** வள்ளலின் வறுமை இரவலனின் ***வறுமை*** என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.
15. எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் ***கபிலர்*** பாராட்டுகிறார்.
16. ***நாக்கு*** ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள்.
17. இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ***ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின்*** இயல்பு.
18. பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி ***நல்லந்துவனார்*** குறிப்பிடுகிறார்.
19. உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் ***நல்வேட்டனார்***.
20. "செல்வம் என்பது சிந்தனையின் நிறைவு என்கிறது ***தமிழ் இலக்கியம்***.
21. "நிறைவடைகிறவனே செல்வம்" என்கிறது ***சீனநாட்டுத் தாவோவியம்***.
22. இயல்பாக அறியும் அறம் ***முதல்*** தரமானது.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

***வினாக்கள் :***

1. சங்க காலம் எவ்வாறு சிறப்புற்று விளங்கியது? (பக் - 184)
2. எதனை அறநெறிக்காலம் என்பர்?
3. "அறத்தில் வணிக நோக்கம் கூடாது" - விளக்குக.
4. சங்க கால அரசியல் அறம் குறித்து எழுதுக.
5. சங்க கால அறம் கூறும் மன்றங்கள் பற்றி எழுதுக.
6. தமிழரின் போர் அறம் பற்றி சங்க கால வழி நின்று விளக்குக.
7. வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை விளக்குக. (அ) கொடை கொடுத்து இன்பமெய்திய வள்ளல்கள் குறித்து எழுதுக.
8. பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் பற்றி விளக்கி எழுதுக.
9. மன்னர்களின் கொடை தன்மையைப் பற்றி புலவர்கள் புகழ்ந்து கூறிய புகழுரைகள் யாவை?
10. வாய்மையைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் எவ்வாறு பேசுகின்றன?

## ***ஞானம்***

1. தி.சொ.வேணுகோபாலனின் ***கோடை வயல்*** கவிதைத் தொகுப்பில் ***ஞானம்*** எனும் கவிதை இடம்பெற்றுள்ளது.
2. தி.சொ.வேணுகோபால் ***திருவையாறு*** எனும் ஊரில் பிறந்தவர்.
3. "எழுத்து" காலப் புலவர்களில் ஒருவர் ***தி.சொ.வேணுகோபாலன்.***
4. தி.சொ.வேணுகோபாலன் மணிப்பால் பொறியியல் கல்லூரியில் ***எந்திரவியல்*** பேராசிரியராகப் பணியாற்றியவர்.
5. "மீட்சி விண்ணப்பம்" எனும் கவிதையை எழுதியவர் ***தி.சொ.வேணுகோபாலன்.***
6. ***இயக்கமே*** உலகம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை.
7. கரையான் ***மண்*** வீடு கட்டும்.
8. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ***இடையறாது அறப்பணி செய்தலை.***

***வினாக்கள் :***

1. காலக்கழுதை கட்டெறுஞ்பானாலும் கவிஞர் செய்வது யாது? (பக் - 198)
2. சாளரத்தினை எவை எவை பாதிப்புக்கு உள்ளாக்கும்? (பக் - 198)
3. கவிஞர். வேணுகோபால் - ஆசிரியர் குறிப்பு தருக. (பக் - 198)
4. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத்தூரிகை - இதைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

## ***காலக்கணிதம்***



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

1. காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவனாகிறவன் ***கவிஞன்***.
2. கண்ணதாசனின் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு கவிதை ***காலக்கணிதம்***.
3. கண்ணதாசனின் இயற்பெயர் ***முத்தையா***.
4. கண்ணதாசன் ***சிவகங்கை*** மாவட்டத்தில் ***சிறுகூடல்பட்டி*** ஊரில் பிறந்தார்.
5. கண்ணதாசனின் பெற்றோர் ***சாத்தப்பன், விசாலாட்சி***.
6. கண்ணதாசன் முதல் திரைப்படப் பாடல் எழுதிய ஆண்டு ***கி.பி.1949***.
7. 1949-ஆம் ஆண்டு ***கலங்காதிரு மனமே*** என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார்.
8. திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் ***மெய்யியலை*** மக்களிடையே கொண்டு சேர்த்தவர்.
9. கண்ணதாசன் எழுதிய புதினங்களுள் ஒன்று ***சேரமான் காதலி***.
10. சேரமான் காதலி எனும் புதினத்திற்காக ***சாகித்திய அகாதெமி*** விருது பெற்றார்.
11. கண்ணதாசன் ***தமிழக*** அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர்.
12. "மாறுகின்ற உலகில் நானும் மாறிக்கொண்டே இருப்பேன்" என்று கூறியவர் ***கண்ணதாசன்***.
13. காரை முத்துப்புலவர் என்று அழைக்கப்பட்டவர் ***கண்ணதாசன்***.
14. "நதிவெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றம் இல்லை விதி செய்த குற்றம் இன்றி வேறு - யாரம்மா!" என்று பாடியவர் ***கண்ணதாசன்***.
15. புவியில் நானோர் ***புகழுடைத்*** தெய்வம்.
16. மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என்று கூறியவர் ***கண்ணதாசன்***.

**வினாக்கள் :**

1. அவனும் யானுமே அறிந்தவை என கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகிறார்? (பக் - 189)
2. தொழில், வேலை பற்றி கவிஞர் உரைப்பன யாவை? (பக் - 189)
3. மாற்றம் எனது மானிடத் தத்துவம் என்று ஏன் ஆசிரியர் கூறுகிறார்?
4. மாறாதிருக்க யான் வன விலங்கல்லன் என ஆசிரியர் கூறக் காரணம் யாது?
5. கவிஞர். கண்ணதாசன் - குறிப்பு வரைக.

## இராமானுசர் நாடகம்

1. நாளுக்கு ஒரு முறை மலர்வது ***சண்பகம்***.
2. ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது ***பிரம்ம கமலம்***.
3. பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது ***குறிஞ்சி***.
4. தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே மலர்வது ***மூங்கில்***.
5. பூரணாரின் மகன் பெயர் ***சௌம்ய நாராயணன்***.

6. கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பறம்பு நாடே என்று கூறிய நூல் ***புறநானூறு***.

***கதை மாந்தர்கள்***

*1. இராமானுசர்*
*2. கூரேசர்*
*3. முதலியாண்டான்*
*4. பூரணர்*
*பொதுமக்கள்*
*பூரணர் மகன் சௌம்ய நாராயணன்*

***பா - வகை, அலகிடுதல்***

1. செய்யுள் உறுப்புகள் மொத்தம் ***ஆறு***.
2. யாப்பு என்றால் ***கட்டுதல்*** என்று பொருள்.
3. ஓசை ***நான்கு*** வகைப்படும்.
4. வெண்பாவிற்குரிய ஓசை ***செப்பலோசை***.
5. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ***அகவலோசை***.
6. வஞ்சிப்பாவிற்குரிய ஓசை ***தூங்கலோசை***.
7. கலிப்பாவிற்குரிய ஓசை ***துள்ளலோசை***.
8. ஆசிரியப்பா ***அகவற்பா*** என அழைக்கப்படுகிறது.
9. குறளும், நாலடியாரும் ***வெண்பா*** யாப்பில் பாடப்பட்டுள்ளது.
10. சிலப்பதிகாரம், மணிமேகலை ***ஆசிரியப்*** பாவில் பாடப்பட்டுள்ளது.
11. வெண்பா ***ஐந்து*** வகைப்படும்.
12. ஆசிரியப்பா ***நான்கு*** வகைப்படும்.
13. மாச்சீர், விளச்சீரை ***இயற்சீர்*** என்று அழைப்பர்.
14. இயற்சீரின் வேறு பெயர் ***ஆசிரிய உரிச்சீர்***.
15. காய்ச்சீரை ***வெண்சீர்*** என்று அழைப்பர்.
16. வெண்பா ***இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை*** பெற்று வரும்.
17. வெண்பாவின் அடி வரையறை ***2 அடி முதல் 12 அடி வரை***.
18. ஆசிரியப்பா ***ஏகாரத்தில்*** முடிவது சிறப்பு.
19. குறள் வெண்பா ***இரண்டு*** அடிகளை உடையதாய் வரும்.
20. அசை ***நேரசை, நிரையசை*** என இருவகைப்படும்.
21. இருவர் உரையாடுவது போன்ற ஓசை ***செப்பலோசை***.
22. ஒருவர் சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை ***அகவலோசை***.
23. கன்று துள்ளினாற்போலச் சீர்தோறும் துள்ளிவரும் ஓசை ***துள்ளலோசை***.
24. சீர்தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை, தாழ்ந்தே வருவது ***தூங்கலோசை***.

**வினாக்கள் :**

1. யாப்பின் உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
2. ஓசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

5. வெண்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக?
6. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக?
7. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
8. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
   கல்லார் அறிவிலா தார் - இக்குறளைப் பிரித்து அலகிட்டு வாய்ப்பாடு தருக.


வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு — 9677358937,8124806122

# தமிழ்
## இயல் - 9 : ஜெயகாந்தம்

1. கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்த எழுத்தாளர் ஜெயகாந்தன்.
2. சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன் என்றவர் ஜெயகாந்தன்.
3. ஜெயகாந்தனின் கல்வித்தகுதி பள்ளிக்கல்வி வரை மட்டுமே.
4. சில நேரங்களில் சில மனிதர்கள் புதினம் பெற்ற விருது சாகித்திய அகாதெமி விருது.
5. நேர் கொண்ட ஆனால் வித்தயாசமான பார்வை நிலத்தில்
   யாருக்கும் அஞ்சாத நெறிகள் . . .
   இவை தாம் அவரின் அடையாளம் அவர் யார்? ஜெயகாந்தன்.
6. சிறுகதை மன்னன் என்று புகழப்படுபவர் ஜெயகாந்தன்.
7. ஜெயகாந்தன் பேசி கட்டுரையாகத் தொகுக்கப்பட்ட பகுதி "எதற்காக எழுதுகிறேன்".
8. "யுகசந்தி" என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ள "தர்கத்திற்கு அப்பால்" என்னும் சிறுகதை நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.
9. சங்கரய்யர் ஹோட்டலில் காபியின் விலை இரண்டணா.
10. ஜெயகாந்தன் குருட்டுப் பிச்சைக்காரனுக்கு இரண்டணா பிச்சைப் போட்டார்.
11. ஜெயகாந்தன் ஊருக்குச் செல்ல இரயில் கட்டணம் பதிமூன்றணா ஆகால் அவரிடமிருந்தது பன்னிரண்டனா மட்டுமே.
12. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| i. | ஒரு பிடி சோறு | - | சிறுகதைத் தொகுப்பு |
| ii. | ரிஷிமூலம் | - | குறும் புதினம் |
| iii. | சுந்தர காண்டம் | - | புதினம் |
| iv. | ஊருக்கு நூறுபேர் | - | திரைப்படம் |

13. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| i. | சோவியத் நாடு விருது பெற்றது | - | இமயத்துக்கு அப்பால் |
| ii. | சாகித்திய அகாதெமி விருது | - | சிலநேரங்களில் சில மனிதர்கள் |
| iii. | தேவன் வருவாரா | - | சிறுகதைத் தொகுப்பு |
| iv. | பிரம்ம உபதேசம் | - | குறும் புதினம் |
| v. | பாரீசுக்குப்போ | - | புதினம் |

14. எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் என்ற கவிதையை யாரைப் பற்றி ஜெயகாந்தன் பாடினார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

15. முன்ரி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாற்றை ஜெயகாந்தன் "ஒரு கதாசிரியனின் கதை" என்னும் பெயரில் எழுதினார்.

16. ஜெயகாந்தன் பிறந்தது 1934, ஏப்ரல் 24.

17. ஜெயகாந்தனின் இறப்பு 2015, ஏப்ரல் 8.

18. ஜெயகாந்தனின் தன்மையை, எழுத்தை நினைவூட்ட எழுதப்பட்ட நினைவு இதழ் ஜெயகாந்தன்.

19. தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரை எழுதும் பழக்கம் உள்ளவர் ஜெயகாந்தன்.

20. ஜெயகாந்தன் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு 1972.

21. படிக்காத மேதை என்று கா.செல்லப்பன் குறிப்பிடும் எழுத்தாளர் ஜெயகாந்தன்.

22. பிரெஞ்சு மொழியில் வந்த "காந்தி வாழ்க்கை வரலாற்றின்" தமிழாக்கம் வாழ்விக்க வந்த காந்தி.

***வினாக்கள் :***

1. ஜெயகாந்தன் சிறு குறிப்பு வரைக. (அ)
   ஜெயகாந்தன் பற்றிய சிறந்த முன்னுரை ஒன்றை உன் பாடப் பகுதியிலிருந்து எழுதுக.
   (பக் - 204)
2. ஜெயகாந்தன் பிறப்பும் இறப்பும் பற்றி எழுதுக. (பக் - 204)
3. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் என்னென்ன? (பக் - 204)
4. எதற்காக எழுதுகிறேன்? ஏன்று ஜெயகாந்தன் குறிப்பிடுவனவற்றை தொகுத்து எழுதுக. (நெடுவினா - பக் - 205)
5. ஜெயகாந்தன் எழுதிய சிறுகதைத் தொகுப்புகள் யாவை?
6. ஜெயகாந்தன் எழுதிய குறும் புதினங்கள் என்னென்ன?
7. ஜெயகாந்தன் எழுதிய புதினங்கள் என்னென்ன?
8. ஜெயகாந்தன் எழுதிய மொழிபெயர்ப்பு நூல்கள் எவை?
9.

## ***ஞானம்***

1. தி.சொ.வேணுகோபாலனின் ***கோடை வயல்*** கவிதைத் தொகுப்பில் ***ஞானம்*** எனும் கவிதை இடம்பெற்றுள்ளது.
2. தி.சொ.வேணுகோபால் ***திருவையாறு*** எனும் ஊரில் பிறந்தவர்.
3. "எழுத்து" காலப் புலவர்களில் ஒருவர் ***தி.சொ.வேணுகோபாலன்.***
4. தி.சொ.வேணுகோபாலன் மணிப்பால் பொறியியல் கல்லூரியில் ***எந்திரவியல்*** பேராசிரியராகப் பணியாற்றியவர்.
5. "மீட்சி விண்ணப்பம்" எனும் கவிதையை எழுதியவர் ***தி.சொ.வேணுகோபாலன்.***


வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122

6. ***இயக்கமே*** உலகம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை.
7. கரையான் ***மண்*** வீடு கட்டும்.
8. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ***இடையறாது அறப்பணி செய்தலை***.

***வினாக்கள் :***

1. காலக்கழுதை கட்டெறுஞும்பானாலும் கவிஞர் செய்வது யாது? (பக் - 198)
2. சாளரத்தினை எவை எவை பாதிப்புக்கு உள்ளாக்கும்? (பக் - 198)
3. கவிஞர். வேணுகோபால் - ஆசிரியர் குறிப்பு தருக. (பக் - 198)
4. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத்தூரிகை - இதைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

## ***காலக்கணிதம்***

1. காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவனாகிறவன் ***கவிஞன்***.
2. கண்ணதாசனின் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு கவிதை ***காலக்கணிதம்***.
3. கண்ணதாசனின் இயற்பெயர் ***முத்தையா***.
4. கண்ணதாசன் ***சிவகங்கை*** மாவட்டத்தில் ***சிறுகூடல்பட்டி*** ஊரில் பிறந்தார்.
5. கண்ணதாசனின் பெற்றோர் ***சாத்தப்பன், விசாலாட்சி***.
6. கண்ணதாசன் முதல் திரைப்படப் பாடல் எழுதிய ஆண்டு ***கி.பி.1949***.
7. 1949-ஆம் ஆண்டு ***கலங்காதிரு மனமே*** என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார்.
8. திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் ***மெய்யியலை*** மக்களிடையே கொண்டு சேர்த்தவர்.
9. கண்ணதாசன் எழுதிய புதினங்களுள் ஒன்று ***சேரமான் காதலி***.
10. சேரமான் காதலி எனும் புதினத்திற்காக ***சாகித்திய அகாதெமி*** விருது பெற்றார்.
11. கண்ணதாசன் ***தமிழக*** அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர்.
12. "மாறுகின்ற உலகில் நானும் மாறிக்கொண்டே இருப்பேன்" என்று கூறியவர் ***கண்ணதாசன்***.
13. காரை முத்துப்புலவர் என்று அழைக்கப்பட்டவர் ***கண்ணதாசன்***.
14. "நதிவெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றம் இல்லை விதி செய்த குற்றம் இன்றி வேறு - யாரம்மா!" என்று பாடியவர் ***கண்ணதாசன்***.
15. புவியில் நானோர் ***புகழுடைத்*** தெய்வம்.
16. மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என்று கூறியவர் ***கண்ணதாசன்***.

**வினாக்கள் :**

1. அவனும் யானுமே அறிந்தவை என கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகிறார்? (பக் - 189)
2. தொழில், வேலை பற்றி கவிஞர் உரைப்பன யாவை? (பக் - 189)

3. மாற்றம் எனது மானிடத் தத்துவம் என்று ஏன் ஆசிரியர் கூறுகிறார்?
4. மாறாதிருக்க யான் வன விலங்கல்லன் என ஆசிரியர் கூறக் காரணம் யாது?
5. கவிஞர். கண்ணதாசன் - குறிப்பு வரைக.

## இராமானுசர் நாடகம்

1. நாளுக்கு ஒரு முறை மலர்வது ***சண்பகம்***.
2. ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது ***பிரம்ம கமலம்***.
3. பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது ***குறிஞ்சி***.
4. தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே மலர்வது ***மூங்கில்***.
5. பூரணாரின் மகன் பெயர் ***சௌம்ய நாராயணன்***.
6. கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பறம்பு நாடே என்று கூறிய நூல் ***புறநானூறு***.

## *கதை மாந்தர்கள்*

*1. இராமானுசர்*
*2. கூரேசர்*
*3. முதலியாண்டான்*
*4. பூரணர்*
*பொதுமக்கள்*
*பூரணர் மகன் சௌம்ய நாராயணன்*

## *பா - வகை, அலகிடுதல்*

1. செய்யுள் உறுப்புகள் மொத்தம் ***ஆறு***.
2. யாப்பு என்றால் ***கட்டுதல்*** என்று பொருள்.
3. ஓசை ***நான்கு*** வகைப்படும்.
4. வெண்பாவிற்குரிய ஓசை ***செப்பலோசை***.
5. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை ***அகவலோசை***.
6. வஞ்சிப்பாவிற்குரிய ஓசை ***தூங்கலோசை***.
7. கலிப்பாவிற்குரிய ஓசை ***துள்ளலோசை***.
8. ஆசிரியப்பா ***அகவற்பா*** என அழைக்கப்படுகிறது.
9. குறளும், நாலடியாரும் ***வெண்பா*** யாப்பில் பாடப்பட்டுள்ளது.
10. சிலப்பதிகாரம், மணிமேகலை ***ஆசிரியப்*** பாவில் பாடப்பட்டுள்ளது.
11. வெண்பா ***ஐந்து*** வகைப்படும்.
12. ஆசிரியப்பா ***நான்கு*** வகைப்படும்.
13. மாச்சீர், விளச்சீரை ***இயற்சீர்*** என்று அழைப்பர்.
14. இயற்சீரின் வேறு பெயர் ***ஆசிரிய உரிச்சீர்***.
15. காய்ச்சீரை ***வெண்சீர்*** என்று அழைப்பர்.
16. வெண்பா ***இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை*** பெற்று வரும்.
17. வெண்பாவின் அடி வரையறை ***2 அடி முதல் 12 அடி வரை***.
18. ஆசிரியப்பா ***ஏகாரத்தில்*** முடிவது சிறப்பு.



**வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122**

19. குறள் வெண்பா ***இரண்டு*** அடிகளை உடையதாய் வரும்.

20. அசை ***நேரசை, நிரையசை*** என இருவகைப்படும்.

21. இருவர் உரையாடுவது போன்ற ஓசை ***செப்பலோசை***.

22. ஒருவர் சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை ***அகவலோசை***.

23. கன்று துள்ளினாற்போலச் சீர்தோறும் துள்ளிவரும் ஓசை ***துள்ளலோசை***.

24. சீர்தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை, தாழ்ந்தே வருவது ***தூங்கலோசை***.

**வினாக்கள் :**

1. யாப்பின் உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
2. ஓசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. வெண்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக?
6. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக?
7. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
8. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
   கல்லார் அறிவிலா தார் - இக்குறளைப் பிரித்து அலகிட்டு வாய்ப்பாடு தருக.



வ.பிரகாஷ் M.A.,B.Ed., தமிழாசிரியர். தொடர்புக்கு ___ 9677358937,8124806122